COMPLIMENTARY COPY
LIBRARY 13 AUG 2012

YARL OSAI
# யாழ் ஓசை
விலை: 15/=
Regested No. QD/83/News/2012
ஓங்கி ஒலிக்கும் ஒப்பற்ற நாதம்
ஓசை : 01 நாதம்: 77 வெள்ளிக்கிழமை 10.08.2012 பக்கங்கள்: 12
www.yarlmann.lk

பிலிப்பைன்ஸில் வெள்ளம் 72பேர் பலி பக்கம் 05

மனநோயை உரியநேரத்தில் அறிவது அவசியம் பக்கம் 09

பஸ் பள்ளத்தில் வீழ்ந்து 31பேர் பலி பக்கம் 05

காதலரைக் கைபிடித்தார் அனன்யா... பக்கம் 09

## மரணதண்டனை விதிக்கப்பட்ட நபர் தற்கொலைக்கு முயற்சி

நுவரெலியா நீதிமன்றில் சம்பவம்

(எம்.நேசமணி, நுவரெலியா நிருபர்)

கொலைக்குற்றத்திற்காக மரண தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளியொருவர் தன்னைத்தானே பிளேடினால் வெட்டிக்கொண்ட சம்பவமொன்று நேற்று நுவரெலியா மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்றுள்ளது. நேற்றுக் காலை (08 ஆம் பக்கம் பார்க்க)

# நவநீதம்பிள்ளை உள்ளிட்ட ஐ.நா.வின் ஆலோசனைகளை ஏற்கவே மாட்டோம்




இரண்டாவது இராணுவ செயலமர்வு நேற்று கொழும்பு - ஹோட்டல் கலதாரியில் நடைபெற்றது. செயலமர்வின்போது புனர்வாழ்வு பெற்ற முன்னாள் விடுதலைப்புலிப் போராளிகள் இராஜதந்திரிகள் முன்னிலையில் நிகழ்த்திய நடன நிகழ்வின் ஒரு தோற்றத்தை படத்தில் காணலாம். (படப்பிடிப்பு: ஜோய் ஜெயக்குமார்)

## வைகோவுக்கும் ஜெயலலிதாவுக்கும் கூட அழைப்பு என்கிறார் அமைச்சர்

(நமது நிருபர்)

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையாளர் நவநீதம் பிள்ளை உட்பட ஐ.நா. அதிகாரிகளை இலங்கைக்கு வருமாறு நாங்களே அழைப்பு விடுத்துள்ளோம். அவர்கள் இங்கு வரலாம். அபிவிருத்திகளை பார்வையிடலாம். ஆனால் ஆலோசனை வழங்க முடியாது. அவ்வாறு வழங்கினால் ஏற்றுக்கொள்ளவும் மாட்டோம் என்று அமைச்சரவை பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார். ஊடகத்துறை அமைச்சில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் (08 ஆம் பக்கம் பார்க்க)

சட்டவிரோதமான சிறுபோக நெற்செய்கை

## இரணைமடு குளத்தின் கீழான பயிர்கள் நாசம்

திட்ட பிரதிப்பணிப்பாளர்

(கரைச்சி நிருபர்)

இரணைமடுக் குளத்திற்கு கீழான சிறுபோக நெற்செய்கை பாதிக்கப்பட்டமைக்கு தற்போது நாட்டில் நிலவுகின்ற வரட்சியும் விவசாயிகளின் ஒத்துழைப்பு இன்மையுமே பிரதான காரணமாகும் என கிளிநொச்சி மாவட்டப் பிராந்திய நீர்ப்பாசனத்திட்ட பிரதிப்பணிப்பாளர் (08 ஆம் பக்கம் பார்க்க)

NINEWELLS HOSPITAL
TODLO
ART CONTEST & EXHIBITION
Painting, Drawing, Print making Photography and More!
for 2013 calendar
Theme: health care
art work must reflect health related to children or maternity
Age Group : Below 12 Year
Due Date : 10th of November 2012
Size : 12 X 14
Please indicate the name & contact details of the contestant on the back of the painting.
Drop Off: Art work could be posted or dropped off at Ninewells Care Mother & Baby Hospital (pvt)Ltd 55/1, Kirimandala Mawatha, Narahenpita, Colombo 5.
Art Exhibition
Date 16th - 18th of November
Venue Ninewells Hospitals, 55/1, Kirimandala Mawatha, Narahenpita, Colombo 05.

## குடாநாடு தழுவிய மின்வெட்டினால் பரீட்சார்த்திகள் பெரிதும் பாதிப்பு

உடுவில்,

நேற்று அதிகாலை வலிகாமம் பகுதி உட்பட பல பகுதிகளிலும் மின்சாரம் தடைப்பட்டமையால் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகிய சம்பவம் நடைபெற்றுள்ளது. க.பொ.த உயர்தரப் பரீட்சை நடைபெறுவதினால் (08 ஆம் பக்கம் பார்க்க)

## செல்வந்தர்களை இலக்கு வைத்து கொள்ளை
## 70 வயது மூதாட்டி கழுத்து நெரித்துக்கொலை

(எம். நியூட்டன்)

செல்வந்தர்களையும் வெளிநாட்டிலிருந்து வருபவர்களையும் இலக்கு வைத்து யாழ்ப்பாணத்தில் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. இந்த நிலை

### கோப்பாயில் பயங்கரம்

யில் நேற்று 70 வயது மூதாட்டி ஒருவரை கழுத்து நெரித்துக்கொலை செய்து அவரிடமிருந்த (08 ஆம் பக்கம் பார்க்க)

## யாழிலிருந்து கடலுக்கூடாக மண்டைதீவுக்கு மின்சாரம்
## 22 வருடங்களின் பின் நேற்று முதல் மீண்டும் ஆரம்பம்

(யாழ்.மத்தி நிருபர்)

மண்டைதீவுக்கு 22 வருடங்களின் பின்னர் யாழ்.நகரில் இருந்து கடலுக்கூடாக உயரழுத்த மின்சாரம் வழங்கப்படவுள்ளது. மண்டைதீவுக்கு மின்சாரம் வழங்கும் பணி நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபையின் வடக்கின் வசந்தத் திட்ட முகாமையாளர் ஐ.குணசீலன் இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார். கடந்த மாதம் ஊர்காவற்றுறை பிரதேச சபையில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் (08 ஆம் பக்கம் பார்க்க)

## இ.போ.ச.வின் சேவை சீரில்லை அரச உத்தியோகத்தர்கள் பாதிப்பு

- பருத்தித்துறை சாலை முகாமையாளர்

(காவெட்டி நிருபர்)

இலங்கை போக்குவரத்துச் சபையினரின் பருத்தித்துறைச் சாலையினரின் வினைத்திறனான திட்டமிடலின்மையினாலும் ஊழியர்களின் அசமந்தப் போக்கினாலும் அரசாங்க உத்தியோகத்தினரும் பொதுமக்களும் (08 ஆம் பக்கம் பார்க்க)



# தமிழர்களுக்கான அடிப்படை உரிமை, வாழ்வாதாரங்களுக்கு தீர்வு கிடைத்த பின்னரே தனி ஈழக்கோரிக்கை சாத்தியமாகும்

**இந்திய பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி**

சென்னை:

இலங்கைத் தமிழர்களுக்கான தற்போதைய தேவை அடிப்படை உரிமைகளும், வாழ்வா தாரங்களும் தான். அதற்கு ஒரு தீர்வு கிடைத்த பின்னரே தனி ஈழக்கோரிக்கை சாத் தி யம்.

தனி ஈழக்கோரிக்கையை கைவிட்டு விட்டதாக கருணாநிதி எப்பவுமே கூறியதில்லை என்ற நிலையில், எதை எப்போது வலியுறுத்த வேண்டும் என்பது அவருக்கு நன் றா கவே தெரியும்.

மேலும், இலங்கைத் தமிழர்களை ஆதரித்துப் போராடியதற்காகவே தி.மு.க. இரண்டு முறை ஆட்சியை இழந்திருக்கிறது என இந்திய பாராளுமன்ற உறுப்பினரும் (தி.மு.க.), கருணாநிதியின் மகளுமான கனிமொழி தெரிவித்தார்.

டெசோ மாநாடு பற்றி தமிழக ஊடகமொன்றுக்கு அளித்த பேட்டியொன் றி லேயே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

அந்த பேட்டியின் விபரம் வருமாறு.

கே: 'டெசோ' அமைப்பு நடத்தும் மாநாடு கருணாநிதியின் அரசியல் கணக்குதானே?

ப: இலங்கைத் தமிழர்களுக்கான முன்னெடுப்புகளை முதல் இயக்கமாகச் செய்ததும், அதை இப்போதுவரை தொடர்வதும் தி.மு.க.தான். இலங்கைத் தமிழர்களை ஆதரித் துப் போராடியதற்காகவே தி.மு.க. இரண்டு முறை ஆட்சியை இழந்தது.

ராஜீவ் காந்தி படுகொலைக்குப் பிறகு, இலங்கை என்கிற வார்த்தையைச்சொல்லக்கூடப் பயந்தவர்கள், இப்போ கருணாநிதியை நோக்கி விரல் நீட்டிப் பேசுகிறார்கள்.

இலங்கைத் தமிழர்கள் குறித்துப்பேசுவதற்கான களமும், தளமும் திரும்ப அமைந்தது தி.மு.க. ஆட்சியில்தான்.

கருணாநிதி செய்தாலும் குற்றம் சாட்டுபவர்கள், 'நான் ஆட்சிக்கு வந்தால், தமிழ் ஈழத்தை உருவாக்கிக் காட்டுவேன்' என வாக்குறுதி கொடுத்தவர்களை ஏன் மறந்தார்கள்?

'போர் என்றால் மக்கள் உயிரிழக்கத்தானே செய்வார்கள்' என மனசாட்சியே இல்லாமப் பேசியவர்களை கேள்வி கேட்கவே இங்கு ஆள் இல்லை. எல்லாப் பிரச்சினைகளுக்கும் அவரை மட்டும் விமர்சிப்பவர்கள், இப்போது ஆட்சியில் இருப்பது கருணாநிதி அல்ல என்பதை எடுத்துச் சொன்னால் நல்லது.

கே: இலங்கைத் தமிழர்களின் நலனுக்காக தி.மு.க. இன்று காட்டுகின்ற அக்கறையை தமிழகத்தின் ஆட்சிப் பீடத்தில் இருந்தபோதே காட்டி இருக்கலாமே?

ப: ஆட்சியில் இருந்தபோது தி.மு.க. எதை செய்யவில்லை? போர் நிறுத்தம் ஏற்படுவதற்கும், பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றதற்கும் கருணாநிதி எவ்வளவு பாடுபட்டார் என்பது அந்த முயற்சிகளைப் பாழாக்கியவர்களுக்கு நன்றாகவே தெரியும்.

தி.மு.க. மட்டுமே அத்தனை விமர்சனங்களுக்கும் பதில் சொல்கிறது என்பதற்காக, குறை கூறுவதை மட்டுமே சிலர் முழு வேலையாக செய்து வருகிறார்கள். இன்று யாரும், பிரபாகரன் என்னிடம் அதைச் சொன்னார்... இதைச் சொன்னார் என்று கற்பனைகளைப் பரப்பலாம். ஆனால் அதை எல்லாம் ஏன் அவர்கள் அன்றைக்கே கூறவில்லை.

போர் முடிந்த பின்னர், அங்கு ஆட்சி அதிகாரத்தைக் கையில் வைத்திருப்பவர்கள் மூலமாகத்தான் அங்கு இருக்கும் தமிழர்களுக்கு குறைந்தபட்ச நன்மையையேனும் செய்ய முடிகிறது. அந்த நோக்கத்தில் அவர்களைச் சந்திக்கப்போனால்... அதற்கும் அடுக்கடுக்காக விமர்சனங்கள்.

ஒருவேளை, எங்களை மட்டுமே விமர்சிக்கிறவங்களுக்கு ஜெயலலிதாவின் செயற்பாடுகள் திருப்தி அளிக்கின்றனவோ என்னவோ?

இன்றைக்கும் இலங்கைத் தமிழர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டுதானே இருக்கிறார்கள். அவர்களுக்கு நல்ல வாழ்க்கைக்கான உத்தரவாதம் அளிக்க ஜெயலலிதா என்ன செய்தார்? குறைந்தபட்சம் இதைப் பற்றி மத்திய அரசிடம் பேசக்கூட இல்லையே.

கே: டெசோ அமைப்பு மாநாட்டில் தனி ஈழக் கோரிக்கையை வலியுறுத்தப்போவது இல்லை என கருணாநிதி அறிவித்ததற்கு மத்திய அரசின் மிரட்டல் தான் காரணம் என்று சொல்கிறார்களே?

ப: தனி ஈழக்கோரிக்கையை கைவிட்டு விட்டதாக கருணாநிதி எப்பவுமே கூறிய தில்லை. இலங்கைத் தமிழர்களுக்கான தற்போதைய தேவை அடிப்படை உரிமை களும், வாழ்வாதாரங்களும் தான். அதற்கு ஒரு தீர்வு கிடைத்த பின்னரே தனி ஈழக் கோரிக்கை சாத்தியம்.

மேலும், எதை எப்போது வலியுறுத்த வேண்டும் என்பது கருணாநிதிக்குத் தெரியும். எனக்குத் தெரிந்து டெசோ மாநாடு குறித்து காங்கிரஸ் தலைவர்கள் யாருமே தி.மு.க. வுடன் பேசவில்லை. எனவே மிரட்டலுக்குப் பின்வாங்கியதாக சொல்வது வெறும் கற்பனையே என்றார்.

## உயர்தர மாணவர்களுக்கான ஆங்கிலம் செறிவூட்டல் பயிற்சி

யாழ்ப்பாணம் இலக்கம் 159 / 4 ஆம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள அமெரிக்க தகவல் கூடத்தில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான ஆங்கில புலமைப்பரிசில் பயிற்சி நெறி நடைபெறவுள்ளது.

செப்டம்பர் மாதம் 6 ஆம் திகதி முதல் நவம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை வியாழன் மற்றும் வெள்ளி நாட்களில் பிற்பகல் 3.30 மணி முதல் 5.30 மணி வரை இப் பயிற்சி நெறி நடைபெறும். பயிற்சியின் முடிவில் சான்றிதழும் வழங்கப்படும்.

இதற்கான அனுமதிப் பரீட்சைகள் செப்டம்பர் முதலாம் திகதி முற்பகல் 9.00 மணிக்கு அமெரிக்க தகவல் கூடத்தில் நடைபெறவுள்ளன.

எனவே மாணவர்கள் இம் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் பயிற்சிக்கான பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. பாடசாலைக் கல்வியை பூர்த்தி செய்தவர்களும் விண்ணப்பிக்க முடியும்.




# தரை ஓடுகள் மோசடி தொடர்பாக கணக்கறிக்கைகள் கணக்காய்வு

(றொக்ஷன்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவில் தரையோடு பதிப்பது தொடர்பாக 14 மில்லியன் ரூபா ஊழல் மோசடி செய்யப்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் மருத்துவச் சங்கம் தெரிவித்த குற்றச்சாட்டு தொடர்பாக யாழ்.மாவட்ட செயலக கணக்குப் பரிசோதகர்கள் குழுவினர் நேற்று முன்தினம் கணக்காய்வுகளை மேற்கொண்டுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது;

யாழ்.போதனா வைத்தியசாலையில் நெக்கோட் திட்டத்தின்கீழ் வெளிநோயாளர் பிரிவிற்கு தரையோடு பதிக்கும் திட்டம் அமுல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் - ஒப்பந்த அடிப்படையில் தரையோடு பதிக்கும் பொறுப்பை யாழ்.போதனா வைத்தியசாலையின் ஊழியரே மேற்கொண்டிருந்தார். இவ் வேலைத்திட்டத்தில் ஒப்பந்த அடிப்படையில் வேலைபுரியும் ஊழியரும் இவ்வைத்தியசாலையின் நிர்வாகத்தினரும் பல ஊழல் மோசடிகளில் ஈடுபட்டதாக யாழ்.போதனா வைத்தியசாலையின் மருத்துவச் சங்கம் தெரிவித்தது.

மருத்துவ சங்கத்தின் இக்குற்றச்சாட்டுத் தொடர்பாக வைத்தியசாலையின் பணிப்பாளரிடம் வினவியபோது இக் குற்றச்சாட்டுப்பொய் எனவும் எந்தவிதமான மோசடியும் நடைபெற்றதாக எனக்குத் தெரியவில்லை எனவும் அவர் தெரிவித்தார். மேலும் நெக்கோட் திட்டத்திற்கும் எனக்கும் எந்தவிதமான சம்பந்தமுமில்லை எனத் தெரிவித்திருந்தார். இந்தவேளை பணிப்பாளருக்கு தற்காலிக இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.இந்நிலையில் தொடர்ந்தும் மருத்துவ சங்கத்தின் தரையோடு பதித்தல் தொடர்பான மோசடிக்கு விசாரணை வேண்டுமென அழுத்தம் கொடுத்தமையினால் யாழ். மாவட்ட செயலகத்திலிருந்து கணக்குப் பரிசோதனைக் குழுவினர் நேற்று முன்தினம் புதன்கிழமை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தனர். காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை 14 மில்லியன் ரூபா பெறுமதியான தரையோடு பதிக்கும் ஊழல் மோசடி தொடர்பாக இக்குழுவினால் கணக்குப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இது தொடர்பான விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படுமென கணக்குப் பரிசோதனைக்குழு வைத்தியசாலையின் நிர்வாகத்தினரிடம் தெரிவித்துள்ளது.

# தில்ருக்ஷனின் மரணத்துக்கு நியாயம் கோரி சர்வதேசத்தை ஈர்க்கும் ஆர்ப்பாட்டம்

**யாழில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாடு**

(நமது நிருபர்)

வவுனியா சிறைச்சாலையில் தாக்குதலுக்கு இலக்காகி கோமா நிலையில் சிகிச்சை பெற்று வந்த தமிழ் அரசியல் கைதியான தில்ருக்ஷன் மரியதாஸின் மரணம் தொடர்பில் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் ஏனைய தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும் தமிழ் அரசியல் கட்சிகளால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கண்டன கவனஈர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று எதிர்வரும் 15 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இடம்பெறவிருப்பதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அறிவித்துள்ளது. அன்றைய தினம் முற்பகல் 11 மணி முதல் 12.30 மணி வரையில் யாழ். பஸ் நிலையத்துக்கு அருகில் நடைபெறவுள்ள மேற்படி கவனயீர்ப்பு போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனநாயக மக்கள் முன்னணி, நவசமசமாஜக் கட்சி, முன்னணி சோசலிஷ கட்சி, புதிய ஜனநாயக மாக்சிஸ லெனினிஸ கட்சி மற்றும் பொது அமைப்புக்களும் கலந்து கொள்ளவிருப்பதாக முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, ஜனநாயக ரீதியிலான இவ் அமைதிப் போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு பொது மக்கள், பொது அமைப்புக்கள், அரசியல் தலைவர்கள் மற்றும் சிவில் சமூகத்தினர் அனைவருக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அழைப்பு விடுப்பதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# அரசியல் தேவைகளுக்கு பாடசாலைகள் பயன்படுத்தப்படுவது நிறுத்தப்பட வேண்டும்

**அகிலவிராஜ் எம்.பி. சபையில் வலியுறுத்தல்**

(அ.கனகராஜ் - ஜே.ஜி.ஸ்டீபன்)

தேர்தல் பிரசாரம் மற்றும் அரசியல் நடவடிக்கைகளுக்காக பாடசாலைக் கட்டடங்களை பயன்படுத்தும் செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக்கட்சி எம்.பி. அகில விராஜ் காரியவசம் நேற்று முன்தினம் சபையில் அரசாங்கத்தை வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை அமர்வின் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் கல்வி அமைச்சரிடம் கேள்விகள் கேட்கும் போதே மேற்கண்டவாறு வலியுறுத்தலை முன் வைத்தார்.

அகிலவிராஜ் எம்.பி. இங்கு மேலும் கூறுகையில், கொழும்பு நகரின் பிரதான பாடசாலையொன்றில் ஆளும் கட்சியினால் நடத்தப்பட்ட மே தினக்கூட்டம் காரணமாக குறித்த பாடசாலை சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது.

மற்றும் அந்த பாடசாலையின் கல்வி நடவடிக்கைகளும் மறுநாளில் தடைப்பட்டிருந்தது. இதே போன்று தற்போது இடம்பெற்று வருகின்ற வட மத்திய மாகாண சபைத் தேர்தல் பிரசாரப் பணிகளுக்காகவும் அநேகமான பாடசாலைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதற்கான பட்டியல் கூட என்னிடம் உள்ளது.

அரசியல் தேவைகளுக்கும் தேர்தல் பிரசாரப் பணிகளுக்கும் பாடசாலைகள் பயன்படுத்தப்படுவதையும் அதனூடாக கல்வி நடவடிக்கைகள் தடைப்படுத்தப் படுவதற்கும் சொத்துக்களுக்கும் சேதம் விளைவிக்கப்படுவதற்கும் இடமளிக்க முடியாது.

எனவே பாடசாலைக் கட்டடங்களில் அரசியல் நடவடிக்கைகளோ அல்லது தேர்தல் பிரசாரப்பணிகளோ முன்னெடுக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இதற்கு கல்வியமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் மேலும் தற்போது உயர்தரப் பரீட்சைகள் இடம்பெற்று வருகின்றன. ஆனால் போதிய பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படாத காரணத்தால் மாணவர்கள் பாரிய அசௌகரியத்தை எதிர்நோக்குகின்றனர்.

இந்நிலைமைகளை தவிர்ப்பதற்கு அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

# தில்ருக்ஷனின் படுகொலைக்கு அரசாங்கமே முழுப்பொறுப்பு

**மனோ கணேசன்**

வவுனியா சிறைச்சாலை சம்பவத்தில் கொடூர தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டு நேற்று உயிரிழந்த மரியதாஸ் தில்ருக்ஷனின் படுகொலைக்கு அரசாங்கமே முழுப் பொறுப்பு ஏற்க வேண்டும்.

இந்த மரணம் தெருவில் நடந்தது அல்ல. வழமையாக சொல்வதைப் போல் விசாரணைகள் நடக்கின்றன.

கொலையாளிகளை இன்னமும் கண்டுபிடிக்க முடியவில்லை என்று சொல்லி அரசாங்கம் தப்பமுடியாது.

இந்த படுகொலை அரசாங்கத்தின் பாதுகாவலுக்கு உட்பட்ட சிறைச்சாலை வளாகத்தில் நடைபெற்றுள்ளது என்பதுடன், தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்ட இன்னும் பல தமிழ் அரசியல் கைதிகள் சிறைச்சாலையிலும் வைத்தியசாலைகளிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள் என்ற அடிப்படை உண்மையை அரசாங்கம் மறைக்க முடியாது என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

உயிரிழந்த யாழ்ப்பாணம் - பாஷையூரை பிறப்பிடமாகக் கொண்ட தமிழ் அரசியல் கைதி மரியதாஸ் தில்ருக்ஷனின் மரணம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த மனோ கணேசன் மேலும் கூறியதாவது:-

மரியாஸ் தில்ருக்ஷன் கடைசிவரை சுய நினைவற்ற நிலைமையில் இருந்துள்ளார்.

இந்நிலையிலும் அவரது கால்கள் சங்கிலியால் அவர் படுத்திருந்த வைத்தியசாலைக் கட்டிலுடன் பிணைக்கப்பட்டு இருந்தது. இந்த உண்மை அரசியல் கைதிகள் மீது காட்டப்படும் கொடூரத்தைப் பறைசாற்றுவதாக அமைந்துள்ளது.

தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள், தாக்குதலுக்குப் பிறகும் முறையான வைத்திய சிகிச்சைகள் இல்லாமல் சாகவிடப்பட்டுள்ளார் என்று நாம், வவுனியாவில் நடைபெற்ற நிமலரூபனின் மரணச்சடங்கின் போது சொன்ன உண்மை இன்று தில்ருக்ஷனின் மரணத்துடன் நிரூபிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், யுத்தம் முடிந்து மூன்று வருடங்களின் பின்னரும் இந்த அரசாங்கம் தமிழர் மீது பழிவாங்கும் எண்ணத்தைக் கைவிடவில்லை என்ற உண்மையும் நிரூபணமாகியுள்ளது.

## யாழ் ஓசை இன்றைய பலன் 10.08.2012

**நந்தன வருடம் ஆடி 26ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

| | |
|---|---|
| நட்சத்திரம் | கார்த்திகை |
| திதி | அபர அட்டமி |
| ராகுகாலம் | 10.34 - 12.04 வரை |
| சுபநேரம் | 6.04 - 7.34 வரை |
| மேடம் | நன்மை |
| இடபம் | வெற்றி |
| மிதுனம் | மகிழ்ச்சி |
| கடகம் | அலைச்சல் |
| சிம்மம் | சஞ்சலம் |
| கன்னி | விரயம் |
| துலாம் | விவாதம் |
| விருச்சிகம் | பணவரவு |
| தனுசு | மேன்மை |
| மகரம் | ஆதாயம் |
| கும்பம் | குதூகலம் |
| மீனம் | மருத்துவம் |

- ராம்தேவா குருக்கள்

# பதினைந்துக்கும் மேற்பட்ட பெண்களுடன் உடல் ரீதியான தொடர்பு கொண்டுள்ளதாக நித்தி ஏற்பு

(நேற்றைய தொடர்ச்சி)

கேள்வி: அந்த சி.டி.யில் நித்தியானந்தாவோடு இருப்பது நானில்லை என்று ரஞ்சிதா மறுத்திருக்கிறாரே?

லெனின் தர்மானந்தா: அப்படியானால் நித்யானந்தாவோடு இருக்கும் பெண் வேறொருவர் என்கிறாரா ரஞ்சிதா? அந்த நித்தியானந்தாவே பொலிஸ் விசாரணையில் ரஞ்சிதாவுடன் பலமுறை செக்ஸ் தொடர்பு கொண்டதாக ஒத்துக்கொண்டிருக்கிறார். அதேபோல் தனக்கு 15க்கும் மேற்பட்ட பெண்களுடன் உடல்ரீதியான தொடர்பு இருந்ததையும் பொலிஸ் விசாரணையில் ஏற்றுக்கொண்டிருக்கிறார் நித்தி. அதுமட்டுமல்ல என்னிடம் தொலைபேசியில் பேசும்போது... 'நானும் மேஜர் ரஞ்சிதாவும் மேஜர் நாங்க செக்ஸ் வச்சுக்கிறதில் என்னடா தப்பு' என்று என்னுடன் நித்தி கெஞ்சிப் பேசியதற்கான ஆதார கேசட்டும் என்னிடம் பத்திரமாக இருக்கிறது.

கேள்வி: உங்கள் மீது புகார் கொடுத்திருக்கும் மற்றொரு பெண்ணான சுப்ரியா யார்?

லெனின் தர்மானந்தா: எனக்கு ரெண்டு மாதங்களுக்கு முன்னதாக 2008இல் நித்தியானந்தா ஆசிரமத்தில் சேர்ந்த பெண் சந்நியாசினி அவர். ஆசிரமத்தில் தமிழ் பப்ளிகேஷன் வேலைகளை பார்த்துக்கொண்டிருந்தவர்.

இந்த சுப்ரியானந்தாவுக்கும் நித்திக்கும் எவ்வளவு நெருக்கம் என்பது ஆசிரமத்தில் இருக்கும் அனைவருக்குமே தெரியும். நித்தியின் அறைக்கு எந்த நேரத்திலும் சென்று தனிப்பட்ட சேவை செய்யும் பத்துப் பெண்களில் முதல் இரண்டு மூன்று இடங்களில் இருந்தவர் இவர்.



ஆசிரம அலுவல்கள் தொடர்பாக இயல்பாக மற்றவர்களைப்போல் இவரைச் சந்தித்துப் பேசியிருக்கிறேன்.

கேள்வி: அவரது முகத்தில் மயக்க மருந்து தெளித்து நினைவிழக்கச்செய்து அவரை உங்கள் கையடக்க தொலைபேசி மூலம் நீங்கள் ஆபாசப் படம் எடுத்ததாகவும் அந்த சமயத்தில் யாரோ அங்கு வந்ததால் அந்தப்பெண் தப்பித்ததாகவும் இந்தப் படத்தைக் காட்டியே நடந்ததை வெளியில் சொல்லக்கூடாது என்று நீங்கள் மிரட்டியதாகவும் சுப்ரியானந்தா புகார் சொல்லியிருக்கிறாரே?

லெனின் தர்மானந்தா: 2009-ஜூன், ஜூலையில் இது நடந்ததா அந்தப்பெண் சொல்கிறாள். நித்தியின் தனிப்பட்ட சேவகிகளில் 2ஆம் இடத்தில் இருந்த சுப்ரியா என்னைக் கண்டு பயப்படத் தேவையுண்டா? அப்படி நடந்திருந்தா ஆன்மிக ஜாம்பவானான நித்திதான் என்னை விட்டு வச்சிருப்பாரா? ஒன்றரை வருடங்களுக்கு முன்பு நடந்ததை இப்போது சொல்ல வேண்டிய நிர்பந்தம் என்ன? தனக்கு நெருக்கமான பெண்களை தனக்கு அடிமையாக மூளைச் சலவை மூலம் மாற்றக்கூடியவர் நித்தி. அவர் ஏவிவிட்ட மனித வெடிகுண்டு போல யார் மீது வேண்டுமானாலும் இப்படிப்பட்ட பெண்கள் பொய்ப் புகாரோடு பாய்வார்கள். இவர்கள் எல்லாம் பரிதாபத்துக்குரிய நித்தியின் கைப் பாவைகள்.

கேள்வி: இன்னும் இரண்டு சந்நியாசிப் பெண்களை நீங்கள் பாலியல் பலாத்காரம் செய்து அந்தப் படத்தைக் காட்டித்தான் ரஞ்சிதாவையும் சுப்ரியாவையும் நீங்கள் கெடுக்க முயன்றீர்கள் என்று அவர்கள் கூறியிருக்கிறார்களே?

லெனின் தர்மானந்தா: மேலும் இரண்டு பெண்களைக் கொண்டு நித்தி எனக்கெதிரா வழக்குகளைத் தயார் பண்ணிக் கொண்டு இருக்கார் என்பதையே இது காட்டுகிறது.

நான் இப்படி ஆசிரமத்தில் பெண்களிடம் புகுந்து விளையாடினேன் என்பது உண்மையானால் கடவுள் அவதாரம் என்று சொல்லிக் கொள்ளும் நித்தியின் 'ஞானக்கண்களுக்கு' அது எப்படி தெரியாமல் போனது? அதுசரி அவரால் அவர் அறையில் வைக்கப்பட்டிருந்த கேமராவையே கண்டுபிடிக்க முடியாதபடி அவரது கண்களை காமம் மறைக்கும் போது அவர் என்ன பண்ணுவார் பாவம்.

இப்போதும் சொல்கிறேன் இவர் இன்னும் எத்தனை பொய்ப் புகார்களை எனக்கு எதிராகப் புனைந்தாலும் அவற்றை சட்டத்தையும் சத்தியத்தையும் நம்பி சந்திப்பேன்.

# Maliban Quiz 06

Powered By Maliban Gold Marie




## இவ்வார வரலாற்றுப் பயணம் :

# யாழ் பொது நூலகம்

Maliban
Full of goodness

யாழ்ப்பாணப் பொது நூலகம் யாழ்ப்பாணத்திலுள்ள சிறப்பம்சங்களில், 1981 ஆம் ஆண்டிற்குப் பின்னர் அனைத்துலக அளவில் அதிகமாகப் பேசப்பட்ட ஒரு நூலகமாகும். 20 ஆம் நூற்றாண்டின் முப்பதுகளின் ஆரம்பத்தில் தொடங்கிப் பல ஆர்வலர்களுடைய அயராத உழைப்பினாலும், பொது மக்களினதும், பல உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்களினதும் தாராளமான ஆதரவினாலும் வளர்ச்சி பெற்றிருந்த இந்த நூலகம் அதன் அரை நூற்றாண்டு நிறைவை அண்மித்துக் கொண்டிருந்தபோது மே 31, 1981 எரிக்கப்பட்டுச் சாம்பலானது. இன்று இதன் கட்டடம் மீளமைக்கப்பட்டுப் புதிய நூல்கள் சேர்க்கப்பட்டிருப்பினும், எரிந்துபோன பல நூல்களும், பழமைவாய்ந்த கையெழுத்துப் பிரதிகளும், வேறு பல ஆவணங்களும் திரும்பப் பெறமுடியாதவை குறிப்பிடத்தக்கவை. இந்த நூலகத்திற்கான கரு கே. எம். செல்லப்பா என்னும் ஆர்வலரொருவரால் உருவாக்கப்பட்டது. நவம்பர் 11, 1933 ஆம் ஆண்டில் தனது வீட்டில், சில நூல்களுடன் இவர் நடத்திவந்த நூல் நிலையமே இது. இதனைப் பலருக்கும் பயன்படும் வகையில் விரிவுபடுத்தும் நோக்கில், செல்லப்பா அவர்களும் வேறு சில பிரமுகர்களும் இணைந்து செயல்பட்டு, இந்த நூல் நிலையத்தை யாழ் நகரின் மத்தியில் யாழ் ஆஸ்பத்திரி வீதியில் இதற்கென வாடகைக்குப் பெறப்பட்ட ஒரு சிறிய அறையொன்றுக்கு மாற்றினார்கள். அக்காலத்தில் சில நூல்களே இங்கிருந்தன. 1936க்குப் பின்னர், நூலகம் யாழ் நகரசபையிடம் கையளிக்கப்பட்டு, யாழ் கோட்டைக்கு அருகே புதிதாகக் கட்டப்பட்ட நகர மண்டபத்துக்கு அண்மையிலுள்ள இடமொன்றுக்கு மாற்றப்பட்டது. யாழ்ப்பாணம் மாநகரசபை அந்தஸ்துக்குத் தரமுயர்த்தப்பட்டுப் புதிய சபை பதவியேற்றபின், இந்த நூலகத்துக்கான புதிய கட்டிடமொன்றைக்கட்டும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. பல்வேறு வழிகள் மூலம் இதற்கான நிதியைத் திரட்ட எடுத்த முயற்சிகள் பெரு வெற்றிபெற்றதாகச் சொல்லப்படுகிறது. நூலகத்திற்கான அடிப்படைகளைத் தீர்மானித்து வழிநடத்தும் நோக்கில், அக்காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்த பல கல்வியாளர்களையும் பிரமுகர்களையும் உள்ளடக்கிய குழுவொன்று 1953 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இக்குழு இது தொடர்பில் இந்திய நிபுணர்களினதும் உதவிகளைப் பெற்றுக்கொண்டது. இதற்கான கட்டடத்தை வடிவமைக்கும் பணியும் இந்தியாவின் தமிழ்நாட்டைச் சேர்ந்த கட்டடக்கலைஞர் நரசிம்மனிடம் ஒப்படைக்கப்பட்டது. திராவிடக் கட்டடக்கலைப் பாணியைத் தழுவி இரண்டு தளங்கள் கொண்ட அழகிய கட்டடமொன்றை இவர் வடிவமைத்தார். கட்டடத்தை இரண்டு கட்டங்களில் கட்டிமுடிக்கத் தீர்மானித்து, முதற்கட்டமாக கட்டடத்தின் முன்பகுதிக்கான அடிக்கல் 1953 மார்ச் மாதத்தில் நாட்டப்பட்டது. கட்டடவேலைகள் தாமதமாகவே நடைபெற்றன. 1959 இல் கட்டடவேலைகள் முற்றாக முடிய முன்னரே, அப்போது யாழ்ப்பாண மேயராக இருந்த அல்பிரட் துரையப்பா நூலகத்தின் திறப்புவிழாவை நடத்தினார்.

**கேள்வி :**
**யாழ்நூலகத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள கோயிலின் பெயர் என்ன?**



இந்த போட்டியில் பங்குகொள்ள மலிபன் கோல்ட் மாரி பிஸ்கட் பக்கட் உறைகள் இரண்டோடு கீழ்காணும் கூப்பனை நிரப்பி பின்வரும் விலாசத்திற்கு ஆகஸ்ட் 16, 2012 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். "Maliban Quiz" P.O.Box. 160, Colombo

சரியான விடை எழுதி அனுப்புபவர்களிலிருந்து இரண்டு அதிஷ்டசாலிகளை குலுக்கள் முறையில் தெரிவு செய்து வெற்றியாளர்களுக்கு தலா 1500/- பெறுமதியான மலிபன் பிஸ்கட் உற்பத்திகள் அனுப்பி வைக்கப்படும்.

Maliban Quiz 05 இல் கேட்கப்பட்ட கேள்விக்கான சரியான விடை
**மந்திரி மனை**

அதிஷ்டசாலி வெற்றியாளர்கள்

1. உ. டிலக்ஷிகா
   425, நாவலர் வீதி,
   அரியாலை, யாழ்ப்பாணம்.
2. A. ஜெயவேந்திரம்
   கதிர்காம வாசல், நெல்லியடி கிழக்கு,
   கரவெட்டி

**இவ்வார வரலாற்று பயணம்**

Maliban Quiz 06

விடை : ..............................
பெயர் : ..............................
முகவரி : ..............................
..............................
தொலைபேசி இல : ..............................
தே.அ.அட்டை இல : ..............................

Maliban Full of goodness | யாழ் ஓசை

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் மற்றும் மலிபன் நிறுவன உத்தியோகத்தர்கள், மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் இப்போட்டியில் பங்குபற்ற முடியாது.



YARL OSAI
யாழ் ஓசை
ஓங்கி ஒலிக்கும் ஒப்பற்ற நாதம்
ஓசை : 01 நாதம் : 77 வெள்ளிக்கிழமை 10.08.2012 விலை : 15ரூபா
2012 ஆகஸ்ட் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை
இல.117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021-7388101, Fax: 021- 7388102
E-mail-jaffna@virakesari.lk

## இன்றைய சிந்தனை

நேற்று அசாத்தியமாய் இருந்தது இன்று சாத்தியமாகும் அற்புதத்தை ஒவ்வொருநாளும் நாம் கண்டு வருகின்றோம்.

- காந்திஜி

# மற்றுமொரு கைதியின் உயிரிழப்பு

வவுனியா சிறைச்சாலையில் கடந்த மாதம் இடம் பெற்ற அசம்பாவித சம்பவத்தை அடுத்து அங்கிருந்து அநுராதபுரம் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டு பின்னர் அங்கிருந்த சிறைச்சாலை அதிகாரிகளினால் கடுமையான தாக்குதலுக்கு இலக்காகி கோமா நிலையிலிருந்த மற்றுமொரு அரசியல் கைதி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். தில்ருக்கஷன் மரியதாஸ் (வயது 27) என்ற தமிழ் அரசியல் கைதியே பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

சம்பவ தினம் கடுமையான தாக்குதலுக்கு இலக்கான இவர் கோமா நிலையை அடைந்ததையடுத்து ராகம வைத்தியசாலையில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் சிகிச்சை அளிக்கப்பட்டுவந்தது. அநுராதபுரத்திலிருந்தும் மஹர சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டதைத் தொடர்ந்து அங்கிருந்தும் ராகமை வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்தார்.

வவுனியா சிறைச்சாலையிலுள்ள கைதியொருவரை அநுராதபுரம் சிறைச்சாலைக்கு மாற்றியதையடுத்து எழுந்த சர்ச்சை காரணமாக வவுனியா சிறைச்சாலையில் இருந்த மூன்று சிறைக்காவலர்கள் கைதிகளினால் பணயம் வைக்கப்பட்டனர். இதனையடுத்து பொலிஸாரும் கமாண்டோ படையினரும் இராணுவத்தினரும் கூட்டாக மேற்கொண்ட நடவடிக்கைகளை அடுத்து சிறைக்காவலர்கள் விடுவிக்கப்பட்டனர். இதனையடுத்து தமிழ் அரசியல் கைதிகள் உடனடியாக அநுராதபுரத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

அநுராதபுரத்தில் கைதிகள் மீது இரும்புக்கம்பிகளினாலும், பொல்லுகளினாலும், சரமாரியாக தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதுடன், அங்கு அவர்களின் கை,கால்கள், அடித்து முறிக்கப்பட்டதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு குற்றஞ்சாட்டியிருந்தது. இந்நிலையில் கடுங்காயங்களுக்குள்ளான கணேசன் நிமலரூபன் என்ற இளைஞன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இவர் வவுனியா நெளுக்குளத்தைச் சேர்ந்தவராவார். இதனையடுத்து தற்போது மற்றுமொரு உயிரிழப்பு சம்பவம் இடம்பெற்றுள்ளது. காயமடைந்த மேலும் சில கைதிகள் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவேண்டும் அல்லது அவர்கள் மீது நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் நீண்டகாலமாக வலியுறுத்தப்பட்டுவருகின்றது. யுத்தகாலத்தில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இவ்வாறான பல அரசியல் கைதிகள் நாட்டின் பல்வேறு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தம்மை உடனடியாக விடுவிக்கவேண்டும் என்று தமிழ் அரசியல் கைதிகள் பல்வேறு சந்தர்ப்பங்களில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவதும் பின்னர் அரசியல்வாதிகள் அந்த விடயத்தில் தலையிட்டு கைதிகளின் உண்ணாவிரதத்தை முடித்து வைப்பதும் முடிவில் கைதிகள் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருப்பதுமே வழமையாக இடம்பெற்று வருகின்ற போக்காகவுள்ளது.

குறிப்பாக தமிழ் அரசியல்வாதிகளும் இந்த விவகாரத்தில் போராட்டங்களை நடத்திவருவதுடன் பல அழுத்தங்களையும் வெளியிட்டுவருகின்றனர். எனினும் அரசியல் கைதிகள் விடயத்தில் எந்த ஆரோக்கியமான நகர்வுகளும் இடம்பெறவில்லை. குறிப்பாக வவுனியா சிறைச்சாலையில் இடம்பெற்ற அசம்பாவிதத்தையடுத்து கருத்து வெளியிட்டிருந்த அரசாங்க அமைச்சர்கள் இது சர்வதேச புலிகளின் திட்டமிடலுடன் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடாகும் என்று குறிப்பிட்டிருந்தனர். எவ்வாறெனினும் இந்த அசம்பாவிதம் காரணமாக இரண்டு உயிர்கள் பறிபோய்விட்டன.

மூன்று தசாப்தகால யுத்தம் முடிவடைந்து தற்போது நாட்டில் அமைதி சூழ்நிலை திரும்பியுள்ள நிலையில் அரசியல் கைதிகளின் உறவினர்கள் தமது உறவுகள் விடுவிக்கப்படமாட்டார்களா? என்ற ஏக்கத்துடனேயே வாழ்ந்துவருகின்றனர். மேலும் அரசியல் கைதிகளாக உள்ளவர்களின் பெற்றோர் மற்றும் மனைவி, பிள்ளைகள் என பலரும் தமது வாழ்க்கையை கொண்டுநடத்துவதிலும் பல சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

எனவே, அரசியல் கைதிகள் விடயத்தில் விரைவான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமாகும். துரித விசாரணைகளை மேற்கொண்டு குற்றமற்றவர்களை விடுவிப்பதுடன் குற்றமிழைத்ததாக கருதப்படுகின்றவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியும். யுத்தம் முடிவடைந்து அனைவரும் எதிர்காலம் தொடர்பான கனவுகளுடனும் எதிர்பார்ப்புக்களுடனும் வாழ்ந்து வருகையில் குறிப்பிட்ட எண்ணிக்கையான இளைஞர்கள் சிறைகளில் தடுத்து வைப்பு என்ற பெயரில் வாடுவது வேதனைக்குரியதாகும். அந்த வகையில் இந்த விவகாரத்தை தீர்த்துவைக்க அனைத்து தரப்பினரும் ஆரோக்கியமான பங்களிப்பை வழங்கவேண்டும் என்பதுடன் விரைவாக இந்த விவகாரத்துக்கு தீர்வுகாணப்படவேண்டும் என்பதனை வலியுறுத்துகின்றோம்.

# இராசதானி அந்தஸ்தைப் பெற்ற நல்லூரும் சிங்கை நகரும்

ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்தில் தலைநகராக விளங்கிய பிரதேசங்கள் எனில் சிங்கைநகர் மற்றும் நல்லூர் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். நாக அரசர்களின் ஆட்சிக் காலத்தில் கதிரை மலை என அழைக்கப்பட்ட கந்தரோடை பின்னர் இராசதானி அந்தஸ்தினை பெற்றது. கந்தரோடைக்குப் பின்னர் இராசதானி அந்தஸ்தைப் பெற்ற பிரதேசங்கள் எனும்போது சிங்கை நகர் மற்றும் நல்லூர் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

வரலாற்று ஆய்வாளர் மத்தியில் மேற்படி சிங்கைநகர் (நல்லூர்) பற்றிய விடயத்தில் ஒரு குழப்பம் நிலவுவதை அவதானிக்க முடிகிறது. ஒரு சாரார் சிங்கை நகரும் நல்லூரும் ஒன்றே எனக் கருதுகின்றார்கள். மறுசாராரோ நல்லூரும் சிங்கைநகரும் இருவேறு கால கட்டங்களில் இராசதானியாக விளங்கிய இருவேறு நகர்கள் எனக் கருதுகின்றனர். பேராசிரியர் சி.க.சிற்றம்பலத்தின் கருத்துப்படி நல்லூரும் சிங்கை நகரும்

> **அந்தக் கவிவீரராகவன் என்னும் யாழ்ப்பாணன் யாழ்பாடி பரிசுபெற்றதால் ஏற்பட்ட பெயரே யாழ்ப்பாணம் என்று மயில் வாகனப் புலவர் யாழ்ப்பாண வைபவ மாலையில் குறிப்பிட்டுள்ளார்**

ஒன்றே. பொதுவாக நல்லூரே சிங்கை நகர் என்று அழைக்கப்பட்டது எனலாம்.

முத்துக்கவிராசர் என்பவரால் கி.பி. 16ஆம் நூற்றாண்டின் இறுதியில் அல்லது 17ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுதப்பட்டதாக கருதப்படும் கைலாய மலையின் முதலாவது சிங்கைஆரியன் நல்லூரைத் தலைநகராக அமைத்த வரலாற்றைக் கூறும் சுவாமி ஞானப்பிரகாசர் முதலியார் செ.இராசநாயகம், கலாநிதி.க.செ.நடராசா போன்றவர்களின் கருத்துப்படி நல்லூரும் சிங்கைநகரும் இருவேறுபட்ட நகர்களாகும்.

யாழ்ப்பாணத்தில் ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சி கி.பி.13ஆம் நூற்றாண்டில் ஆரம்பித்த தென்பர் வரலாற்றாசரியர்கள். அம்மன்னர்கள் செகராசசேகரன், பரராசசேகரன் என்னும் பட்டப் பெயர்களைச் சூடிக்கொண்டு ஒருவர் பின் ஒருவராக சில காலம் சிங்கை நகரில் இருந்தும் பின்னர் நல்லூரில் இருந்தும் அரசு செய்தனர் என்று ஈழத்தமிழ் இலக்கிய வளர்ச்சி என்ற நூலில் க.செ.நடராசா குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறாக நல்லூர் பற்றியும் சிங்கைநகர் பற்றியும் நிலவுகின்ற இருவேறான கருத்துக்களில் சுவாமி ஞானப்பிரகாசர், முதலியார் செ.இராசநாயகம், க.செ.நடராசா போன்றோர் கருதுவது போன்று நல்லூரும் சிங்கைநகரும் இருவேறு நகரங்கள் என்பதே ஏற்றுக்கொள்ளக் கூடிய கருத்தாக அமைந்துள்ளது. இவற்றிற்கு ஆதாரமாக பின்வருவனவற்றைக் கூறலாம்.

கேகாலையில் கொட்டகம என்னும் இடத்தில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று பின்வருமாறு கூறுகிறது.

**கங்கணம் வேற் கண்ணிணையாற் காட்டினார்**
**காமர்வளைப் பங்கயக்கை மேற்றிலதம் பாரித்தார்**
**பொங்கொலிநீர்ச் சிங்கை நகராயனைச்**
**சேராவனரேசர் தங்கள் மடமாந்தர்தாம்**

இவ்வெண்பாவில் பொங்கொலிநீர் சிங்கையா எனச் சிறப்பித்துக் கூறப்படுவது பற்றி முதலியார் செ.இராசநாயகம் பின்வருமாறு கூறுகின்றார். இச் சிங்கைநகர் அடிஅடியாகப் பல ஆரியச் சக்கரவர்த்திகளுக்கு மகோன்னத இராசதானியாக விளங்குவதற்கு முதன்முதல் அடியிட்டவன் இவ் உக்கிரசிங்கனேயாவான்.

பொங்கொலிநீர் சிங்கைநகர் என சிறப்படை கொடுத்து விதந்தோதப்பட்டிருப்பதால் சிங்கை நகர் பொங்கியெழும் திரையொலியையுடைய சமுத்திரக் கரையோரம் என்பது நிதர்சனமாயிற்று அவ்வாறு அமைந்துள்ள இடம் வல்லிபுரக் கோயிலைச் சேர்ந்த கடலோரத்தில் மணற்றிடரிற் புதைந்து ஆங்காங்கு கிடக்கும் அநேக பாரிய கட்டடங்களாகும் வலியுற்று வெலியுற்று உறுதிபெற்றொளிர்கின்றவென்க.

கைலாயமாலை நல்லூரை நல்லை மூதூர் என அழைக்கின்றது. நல்லூரின் தொன்மையினை இது சுட்டிக்காட்டுகின்றது. முதலாம் இராசேந்திர சோழன் காலத்திலேயே நல்லூர் ஓர் ஆலயம் அமைந்த புனித ஸ்தலமாக விளங்கியதை அறிய முடிகிறது.

யாழ்ப்பாணக் கோட்டையில் இருந்து பெறப்பட்ட முதலாம் இராசேந்திர சோழனின் கல்வெட்டு ஒன்றைப் பற்றிய ஆய்வுகளை ஏற்கனவே கலாநிதி.கா.இந்திரபாலா நடத்தி உள்ளார். இது பற்றி பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் பின்வருமாறு கூறுகின்றார். இக் கல்வெட்டில் தானத்தை அளித்தவராக கந்தன் காணப்படுகிறான். நல்லூரிலே அமைந்த இந்துக் கோயிலுக்கு இவன் வழங்கிய மிருகங்கள் இதில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஏற்கனவே புகழ் பெற்று விளங்கிய தொன்மைவாய்ந்த நல்லூரை சிங்கை நகர் என அழைத்திருப்பார்களா என்பது சந்தேகத்துக்குரியதே. இவற்றை எல்லாம் நோக்கும்போது நல்லூரும் சிங்கைநகரும் இருவேறான நகரங்கள் என்பது ஏற்கக் கூடிய ஒன்றாகவே அமைந்துள்ளது.

### நல்லூரும் யாழ்ப்பாணமும்

சிங்கள மக்கள் 'யாபாபட்டுன' என்று கூறுவது நல்லூரையே குறித்தது எனலாம். சுவாமி ஞானப்பிரகாசர், எஸ். டபிள்யூ. குமாரசுவாமி போன்றவர்களின் கருத்துப்படியும் சிங்களவர் நல்லூருக்குவைத்த 'யாப்பநே', 'யாப்பாபட்டுநேய' என்ற பெயர்கள் யாழ்ப்பாணமாக மருவியது என்பதை அறியலாம். ஞானப்பிரகாச சுவாமிகளும், எஸ்.டபிள்யூ.குமாரசுவாமிகளும் யாழ்பாடியின் கதை புனைத்துரை என்றும் இது போன்ற கதைகள் வையாபாடலிலும் தஷிண கைலாய புராணத்திலும் மலிந்து கிடக்கின்றன எனக் கூறியதோடு அந்தக்கவி வீரராகவன் உண்மைச் சரிதையை யாழ்பாடி தலையில் வைபவமாலைக்காரர் கட்டி வைத்தார் எனவும் அப்படி ஒருவர் இருக்கவும் இல்லை. யாழ்ப்பாணம் பரிசிலாக ஒருவருக்குக் கொடுக்கப்படவுமில்லை எனவும் சிங்களவர் நல்லூருக்கு வைத்த 'யாப்பநே', 'யாப்பாபட்டுநே' என்னும் பெயர்களே பிற்காலத்தில் யாழ்ப்பாணம் என மருவியது எனவும். யாழ்ப்பாணன் கதையை எமது புலவர்கள் உருவகப்படுத்தி வைத்தியர்களாகவும் கூறுவர்.



முதலியார் இராசநாயகம், கலாநிதி.க.செ.நடராசா போன்றவர்களின் கருத்துக்கள் மேலுள்ள கருத்துக்கு முற்றும் எதிரானது. 'யாழ்ப்பாணப் பட்டினம்' என்ற தமிழ்ப்பெயர் சிங்களத்திலே யாப்பாபட்டுநே என்பதே இவர்களது கருத்தாகும்.

சிங்களப் புலவர் ஒருவர் தங்காலையில் எழுதி வைத்த நூலில் கண்ட யாப்பாபட்டுநே என்ற பெயரினை யாழ்ப்பாண வாசிகள் எவ்விதமாய் அறிந்து அமைத்துக் கொண்டனர் என்பது ஆச்சரியமாகவே உள்ளது. யாப்பாபட்டுநேக்கும் நல்லூருக்கும் கருத்துப் பொருத்தம் இருந்தாலும் முந்தியபெயரை நல்லூருக்கு இட்டு வழங்க வேண்டிய அவசியமில்லை. நல்லூரென முற்காலத்தில் தமிழர் சிங்கள நாட்டில் இட்டு வழங்கிய ஊர்ப்பெயர்களை இன்றும் அவ்வண்ணமே நல்லூர் என அழைக்கும் சிங்கள மக்கள் யாழ்ப்பாணத்தில் இருக்கும் நல்லூர் என்னும் பெயரினை சிங்களமாக மாற்றி வைத்தார் என்பது விந்தையே. இப்பிரச்சினை பற்றி கலாநிதி. க.செ.நடராசா நல்லதொரு விளக்கத்தைத் தந்துள்ளார். சிங்களப் பெயராகக் கருதப்பட்ட யாப்பாபட்டுந என்பது யாபா என்ற பதமும் பட்டுந என்ற பதமும் இணைந்த சொற்கூட்டாகும். பட்டுந என்பது தமிழிலே பட்டினம் என்று வழங்கும் துறைமுக நகரத்தைக் குறிக்கும் சொல்லின் திரிபாகும்.

> **உக்கிரசிங்கன் காலத்தில் செங்கடக நகர் என்னும் நகர் கனவிலும் அறியப்படாத ஒன்று என யாழ்ப்பாண சரித்திரம் கூறுகிறது**

அந்தக் கவிவீரராகவன் என்றும் யாழ்ப்பாணன் யாழ்பாடி பரிசுபெற்றதால் ஏற்பட்ட பெயரே யாழ்ப்பாணம் என்று மயில் வாகனப் புலவர் யாழ்ப்பாண வைபவ மாலையில் குறிப்பிட்டுள்ளார். அக்காலத்திலே சோழநாட்டிலிருந்து இரண்டு கண்ணும் குருடனாகிய கவிவீரராகவன் என்னும் யாழ்ப்பாணன் செங்கடக நகரில் இருந்து அரசாட்சி செலுத்தும் பாலசிங்க மகாராஜன் பேரில் பிரபந்தம் பாடிக்கொண்டு போய்

யாழ் வாசித்து பாடினான். அரசனதைக் கேட்டு மிக்க சந்தோசம் கொண்டு அவனுக்குப் பரிசிலாக இலங்கையின் வடதிசையில் உள்ள மணற்றிடல் என்னும் இந்நாட்டை கொடுத்தான். பாணன் இதற்கு யாழ்ப்பாணம் என்று பெயரிட்டான் என்று கூறப்படுகிறது.

மயில்வாகனப்புலவர் கூறும் செங்கடக நகர் என்பது சிங்கைநகரைக் குறிக்கும் என்பதே முதலியார் இராசநாயகத்தின் கருத்தாகும். சிங்கைநகர் என்னும் பெயரை மயில்வாகனப் புலவரோ அவருக்குப் பின் ஏடெழுதியவர் எவரோ செங்கடக நகர் என்று வைபவமாலையில் மாற்றிவிட்டனர். உக்கிரசிங்கன் காலத்தில் செங்கடக நகர் என்னும் நகர் கனவிலும் அறியப்படாத ஒன்று என யாழ்ப்பாண சரித்திரம் கூறுகிறது.

யாழ்ப்பாண சரித்திரம் என்ற நூலின் ஆசிரியர் ஆ.முத்துத்தம்பிப்பிள்ளையின் கருத்துப்படி கி.பி.2 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஏலேல சிங்கன் என்ற மன்னன் அந்தகனான யாழ்பாடி என்பவனுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலமே யாழ்ப்பாணம் என்பதாகும். அதற்கு ஆதாரமாக அவர் தனிப் பாடற் திரட்டில் காணப்படும் பின்வரும் பாடலைக் காட்டுவார்.

**நல்லூர் உலா 14**

**'நரை கோட்டிளங் கன்று**
**நல்வளநாடு நயந்தளிப்பான்**
**விரையூட்டு தார்புலவெற்**
**பீழமன்னனைத வீரும்பிக்**
**கரையோட்டமாக மரக்கலம்**
**போட்டுணைக்காண வந்தாற்**
**திரைபோட்டிருந்தவையேலேல**
**சிங்க சிகா மணியேசு**

இப்பாடலின் யாப்பைக் கொண்டு இது கி.பி. மூன்றாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டதென்று க.செ.நடராசா கருவார். இலங்கையின் வடபுறத்திலிருந்து மணற்றிடரினைத் திருத்தி வளமாக்கியவன் விபீடணனிடம் யாழ். வாசிக்கும் ஒருவனே என்பதை வையாபாடல் கூறும்.

தமிழரின் பழைய இசைக்கருவிகள் மூன்று அவை யாழ், குழல், முழவு என்பனவாம். இவற்றில் யாழ் மீட்டிப் பாடிடும் பாணரே யாழ்ப்பாணர் என்ற பெயரைப் பெற்றனர். காலப் போக்கில் அது சாதிப்பெயராக மாறியது. எனவே யாழ்ப்பாணம் என்பது சாதிப்பெயராகும். இவ்வாறு தமிழ்ப் பெருங்காப்பியங்களில் சொல்லப்பட்டிருக்கும் யாழ்ப்பாணர் என்னும் சாதியினரில் ஒரு பகுதியினர் இலங்கைத்தீவின் வடபகுதியில் வாழ்ந்த இடமே யாழ்ப்பாணம் என்ற பெயரைப் பெற்றது. (09.12.1990 வீரகேசரி இதழில் வெளிவந்த கட்டுரையில் குறிப்பிடப்பட்டவை இவை).

அருணகிரிநாதர் குறிப்பிட்ட தலம் ஈழநாட்டின் கண்ணதே என்பது வலியுற்றான் யாழ்ப்பாணம் என்னும் சொல் சிங்களப் பெயரடியாகப் பிறந்ததென்னுங் கொள்கை வலியிழந்து போய்விடும். இவற்றையெல்லாம் பார்க்கும் போது நல்லூர் என்பதன் சிங்கள மொழி பெயர்ப்பான யாப்பாட்டுநே என்பதிலிருந்து வந்த பெயரே யாழ்ப்பாணம் என்பதிலிருந்து வந்த பெயரே யாழ்ப்பாணம் என்பதிலிலும் பார்க்க யாழ்ப்பாணம் என்ற தூய தமிழ்ச் சொல்லின் பொருத்தமுடையதாக்கப்படுகிறது.

இவற்றிலிருந்து இறுதியாக நாம் வரக்கூடிய முடிவு நல்லூரும் சிங்கைநகரும் இரு வேறு வேறான இராஜதானிகள் இரு வேறான நகரங்கள் என்பதே பொருத்தமுடையதாகும்.

(தொடரும்)

நடராசா கணேசமூர்த்தி
வட்டுக்கோட்டை நிருபர்

# பிளாஸ்டிக் பைகளில் மறைந்து தப்பிச்செல்ல முயன்ற கைதிகள்

சிறைச்சாலை காவலரிடம் சிக்கினர்



கழிவு உணவு மற்றும் கடதாசி தட்டுகளை உள்ளடக்கிய பிளாஸ்டிக் பைகளில் மறைந்து இரு கைதிகள் சிறைச்சாலையிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு முயன்ற சம்பவம் பிரேசிலில் இடம்பெற்றுள்ளது.

தென் பிரேசிலில் குரிரிபா நகரிலுள்ள டிலெகாசியா டி புர் டோஸ் சிறைச்சாலையில் சிறைவாசம் அனுபவித்து வந்த சிட்னி டா குருஸ் (24 வயது) மற்றும் கார்லொஸ் பெரேயிரா ஆகிய கைதிகளே இவ்வாறு பிளாஸ்டிக் பைகளில் மறைந்து தப்பிச் செல்ல முயற்சித்துள்ளனர்.

மேற்படி குப்பை பைகள் சிறைச்சாலைக்கு வெளியில் எடுத்துச் செல்லப்பட்டு வீசப்படும் சமயம் தப்பிச் செல்வதற்கு இரு சிறைக்கைதிகளும் திட்டமிட்டிருந்தனர்.

இந்நிலையில் குப்பைப் பையொன்றில் அசைவு ஏற்படுவதை அவதானித்த காவலர் ஒருவர், அதனை பரிசோதிக்க முயற்சிக்கவும் சிறைக்கைதிகள் இருவரும் அந்த பிளாஸ்டிக் பைகளிலிருந்து வெளிப்பட்டு சரணடைந்துள்ளனர்.

செவ்வாய்க்கிழமை பகல் உணவிற்கு பின் நடந்த இந்த சம்பவம் குறித்து சர்வதேச ஊடகங்கள் வியாழக்கிழமை செய்தி வெளியிட்டுள்ளன.

மீளவும் கைது செய்யப்பட்டுள்ள அந்தக் கைதிகளின் தண்டனைக் காலம் மேலும் நீடிக்கப்படவுள்ளதாக பொலிஸ் தலைமையதிகாரி கார்ஸன் அல்விஸ் மக்டோ தெரிவித்தார்.

## எதென்ஸில் காட்டுத் தீ அனர்த்தம்....




கிரேக்கத்தின் எதென்ஸ் நகரின் தெற்கே 100 கிலோமீற்றர் தொலைவில் கொரின்தோஸ் எனும் இடத்திற்கு அண்மையில் இடம்பெற்ற காட்டுத் தீயை அணைக்க தீயணைப்புப் படை வீரர்கள் போராடுவதை படத்தில் காணலாம். இந்தக் காட்டுத்தீயில் சிக்கி 4 தீயணைப்புப் படைவீரர்கள் உட்பட 6 பேர் எரிகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

# புன்னகைக்க மறுத்த 2 வயது மகளை கொலை செய்த தந்தை

நியூஸிலாந்தில் சம்பவம்

தன்னைப் பார்த்து புன்னகைக்க மறுத்தமைக்காக தனது 2 வயது மகளை கொடூரமான முறையில் தந்தையொருவர் படுகொலை செய்த சம்பவம் நியூஸிலாந்தில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பான வழக்கு விசாரணை நியூஸிலாந்து உயர் நீதிமன்றத்தில் இடம்பெற்றது.

கெபு இகமனு என்ற தந்தையே தனது மகள் செயினி தன்னைப் பார்த்து புன்னகைக்க மறுத்ததால் சினமுற்று அவளைத் தூக்கி சுவரை நோக்கி வீசியுள்ளார்.

இதன் போது சிறுமியின் தோள் மூட்டுகளும் இடுப்பு எலும்புகளும் முறிவடைந்ததுடன் மூளைப்பகுதியும் சேதமடைந்துள்ளது.

இதனையடுத்து உடனடியாக ஆக்லாண்டிலுள்ள ஸ்டார்ஷிப் மருத்துவமனைக்கு செயினிகொண்டு செல்லப்பட்டார்.





ஆனால் மருத்துவர்களால் செயினியின் உயிரை தற்காலிக மாகவே தக்க வைக்க முடிந்தது. படுத்த படுக்கையாக இருந்த அவர் மூளைச் சிதைவு காரணமாக மரணத்தைத் தழுவினார். செயினி பிறந்தது முதற் கொண்டு பெருமளவு காலத்தை தனது பாட்டா, பாட்டியுடன் கழித்து விட்டு தனது பெற்றோரிடம் மீளவும் வந்தடைந்த போதே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த வழக்கு தொடர்பான அடுத்தகட்ட விசாரணை பிறிதொரு நாளுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# பிலிப்பைன்ஸில் வெள்ள அனர்த்தத்தால் பலியானோர் தொகை 72 ஆக உயர்வு...

பிலிப்பைன்ஸின் மணிலா நகரில் அடை மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் சிக்கி உயிரிழந்தவர்கள் தொகை 72 பேராக உயர்ந்துள்ளது.

தொடர்ந்து 11 நாட்களாக பெய்த அடை மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் 12 மில்லியன் பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 850,000 பேர் வீடு வாசல்களை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர். பெருக்கெடுக்கும் அபாய நிலையிலுள்ள ஆறுகளின் அண்மையில் குடியிருப்பவர்களை இடம்பெயர உத்தரவிடப்பட்டுள்ளது.





# 'டெசோவுக்கு எதிரான வழக்கை அவசரமாக விசாரிக்க முடியாது'

சென்னை:

டெசோ மாநாடுக்கு தடை விதிக்கக் கோரி தொடரப்பட்ட வழக்கை அவசரமாக விசாரிக்க முடியாது என தலைமை நீதிபதி இக்பால் குறிப்பிட்டார்.

சென்னை ராயப்பேட்டையில் வை.எம்.சி.ஏ. மைதானத்தில், ஆகஸ்ட் 12 ஆம் திகதி டெசோ மாநாடு நடைபெறுகிறது.

இந்நிலையில், 'இந்த மாநாடு நடத்தப்பட்டால், சட்ட ஒழுங்கு பிரச்சினை ஏற்படும். எனவே இந்த மாநாட்டை நடத்துபவர்கள் மீது தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்யவேண்டும். மாநாட்டுக்கு தடை விதிக்க வேண்டும்' என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னை மேல்நீதிமன்றில் வழக்கறிஞர் பாலசுப்ரமணியன் என்பவர் பொதுநல வழக்கொன்றை தொடர்ந்தார்.

### தலைமை நீதிபதி மறுப்பு

மேலும், இந்த வழக்கை அவசர வழக்காக விசாரிக்க கோரியும் தலைமை நீதிபதி எம்.வை. இக்பால், நீதிபதி டி.எஸ். சிவஞானம் ஆகியோர் முன்பு ஆஜராகி கோரிக்கை விடுத்தார். ஆனால், இந்த வழக்கை அவசர வழக்காக உடனடியாக எடுத்து விசாரிக்க தலைமை நீதிபதி மறுத்து விட்டார்.



# பஸ் பள்ளத்தில் கவிழ்ந்து விபத்து 31பேர் சம்பவ இடத்திலேயே பலி

ஷில்லாங்:

மேகாலயாவின் ஜெயின்தியா மாவட்டத்தில், மலை பள்ளத்தாக்கில் பயணிகள் பஸ்ஸொன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 31 பேர் சம்பவ இடத்திலேயே பலியானார்கள். மேலும், 27 பேர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.



### 27 பேர் படுகாயம்

அசாம் மாநிலம் கவுகாத்தியிலிருந்து, திரிபுரா மாநிலம் அகர்தலாவிற்கு செவ்வாய்க் கிழமை யன்று இரவு பயணிகள் பஸ் ஒன்று புறப்பட்டுச் சென்றது. இந்த பஸ் நேற்று முன்தினம் அதிகாலை, மேகாலயாவின் ஜெயின்தியா மாவட்டத்தில், டாம்செங் கிராமம் அருகே சென்று கொண்டிருந்த போது, 80 அடி மலைப் பள்ளத்தாக்கில் கவிழ்ந்து விழுந்தது. இதில், 31 பேர் சம்பவ இடத்திலேயே பலியானார்கள். மேலும் 27 பேர் படுகாயம் அடைந்த நிலையில் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இலங்கையின் முதல்தர வடலப்பன் உற்பத்தியுடன் இணைந்து கொள்ள உங்களுக்கோர் அரிய வாய்ப்பு

**விநியோகப் பிரதிநிதிகள் தேவை**

**சிற்றுண்டி உற்பத்தியில் முன்னணி** நிறுவனமான சுரஸ வடலப்பன் கடந்த 15 வருட காலத்தினுள் வேகமான வளர்ச்சியை கொண்டுள்ளது. வரையறுக்கப்பட்ட சுரஸ லங்கா(தனி.) நிறுவனம் சுரஸ வடலப்பன் விநியோகத்திற்காக முழு இலங்கையையும் உள்ளடக்கியவாறு விநியோக முகவர்களை (Distributors) எதிர்பார்க்கின்றது.

தகுதிகள்

- நிதி / வங்கி உத்தரவாதம்
- குளிரூட்டி மற்றும் அதிகுளிரூட்டி வசதிகள்
- குளிரூட்டப்பட்ட உணவுகளை போக்குவரத்து செய்வதற்கான ஏற்ற வாகனத்தினை கொண்டிருத்தல்
- தேவையான அளவு முதலீடு செய்யக்கூடிய திறன்
- சவால்களை எதிர்கொண்டு வியாபாரத்தினை வெற்றிகரமாக கொண்டு செல்லக்கூடிய திறன்

உங்களது விபரங்கள் அடங்கிய விண்ணப்பப்படிவத்தினை கீழ் காட்டப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கவும். கடித உறையின் இடப் பக்க மேல் மூலையில் **விநியோக முகவர் பதவி** என குறிப்பிடவும்.

GMP Certified Company

சுரஸ

**SURASA LANKA (PVT)LTD**
No.183/2,Ruppagoda Road,Gonahene,Kadawatha
Tel/Fax :0112971632/0715357631
E-mail :info@surasalanka.com
Web :www.surasalanka.com

விற்பனையாகிறது 2012 தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கு...

**வெற்றிச்சிகரம்**

விலை 20/-

1 - 20 வரைதொடர் மாதிரி வினாத்தாள்கள் விடையுடன்

ஆக்கம் : திருகோணமலை எஸ். கணேசலிங்கம்

வெளியீடு யுனிலங்காஸ்

32, சென். அந்தனிஸ் மாவத்தை, கொழும்பு 13. தொ. பே. 0776258778.

தொடர் வரிசையில் 16 வது இதழ் வெளிவந்துள்ளது

தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கு...


கணித விவேகவழிகாட்டி

ஒழுங்குபடுத்தப்பட்ட தெளிவான பாடங்களுடன் இலகுவான வசனநடையில் தொகுக்கப்பட்ட புலமைப்பரிசில்பரீட்சை வினாக்களையொத்த பயிற்சி வினாக்களுடன், விடைகள் அடங்கிய பதிப்பு.

தொகுப்பு : அக்கரைப்பற்று ஐ.எல்.எம். ஸபான்.

வெளியீடு யுனிலங்காஸ்

Tel : 011 4014438 / 077 6258778



விலை 400/-

எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும்

## பண்டத்தரிப்பு கொலை வழக்கில் முதலாம் எதிரிக்கு 8 வருட கடூழியச்சி

(ரொக்ஷன்)

பண்டத்தரிப்பு வடலியடைப்புக் கொலை வழக்கில் முதலாம் எதிரிக்கு கொலையல்லாத மரணமொன்றை ஏற்படுத்தியதற்காக 8 வருட கடூழியச்சிறைத் தண்டனை வழங்கி யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி ஜே. விஸ்வநாதன் தீர்ப்பளித்தார்.

குறித்த கொலைக் குற்றம் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட மூன்று ஏனைய குற்றவாளிகளையும் இக்குற்றச்சாட்டில் இருந்து மேல் நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

கடந்த 2007ஆம் ஆண்டு ஆவணி மாதம் 2ஆம் திகதி பண்டத்தரிப்பு வடலியடைப்பில் குமாரசுவாமி ராஜசிங்கம் என்பவரைக் கொலை செய்ததாக அதே இடத்தைச் சேர்ந்த நான்கு நபர்கள் மீது சட்டமா அதிபரினால் குற்றம் சாட்டப்பட்டது. ராஜேஸ்வரன், கணேஸ்வரன் சின்னத்துரை, சாந்தகுமார் கனகசபை, ராஜேஸ்வரன் கவிதா, சாந்தகுமார் ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

நான்கு எதிரிகளில் முதலாம், நான்காம் எதிரி மூன்றாம் எதிரியின் பிள்ளை என்பதும் முதலாம், இரண்டாம் எதிரி, மூன்றாம் எதிரியின் மருமகள் என்பதும் குறிப்பிடத்தக்கது. இரண்டாம் எதிரி வெளிநாடு சென்றமையினால் இரண்டாம் எதிரி இல்லாமலே அவருக்கான வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இறந்தவரின் மனைவி நாகதேவி, அவரது தந்தையார், இராசையா துரைசிங்கம், நாகேஸ்வரன், செந்தூரன், குமாரசுவாமி அமரசிங்கம், கணேசலிங்கம் நாகராணி, கந்தையா, நவரெட்ணம், மாயவன் ராமச்சந்திரன் ஆகியோரும் சட்டவைத்திய அதிகாரி கந்தையா இரத்தினசிங்கம் மற்றும் பொலிஸ் சாட்சியங்களும் சாட்சியமளித்தன.

எதிரி சார்பில் முதலாம் எதிரி சாட்சியமளித்தார். இரு தரப்பு சட்டத்தரணிகளினதும் தொகுப்புரையையடுத்து ஒத்திவைக்கப்பட்டிருந்த வழக்கிற்கு நேற்று முன்தினம் தீர்ப்பு வழங்கப்பட்டது.

முதலாம் எதிரி, 4ஆம் எதிரி சார்பில் சட்டத்தரணி சிறிக்காந்தாவும் மூன்றாம் எதிரிக்கு கே.பி.எல். வரதராஜனும் ஆஜராகியிருந்தனர். அரச தரப்பில் சட்டத்தரணி திருக்குமரன் ஆஜராகியிருந்தார்.

## கல்வியுடன் ஒழுக்கத்தினையும் போதிக்கும் போது சகல மாணவர்களது எதிர்காலமும் சிறப்படையும்

**யாழ்.பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைப் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா**

தெல்லிப்பழை,

கல்வியோடு மாத்திரமல்லாது ஒழுக்கம், விழுமியம், அறம் போன்றவற்றைப் போதிப்பவர்களாக ஆசிரியர்கள் விளங்கவேண்டும். இதனை ஆசிரியர்கள் மேற்கொள்ளும் போது மாணவர்களது வாழ்வு சிறப்படைகின்றது. மாணவர்களது வாழ்வு சிறப்படையும் போது போதித்த ஆசிரியருடைய வாழ்வும் சிறப்படைகின்றது என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைப் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா தெரிவித்தார்.

செஞ்சொற் செல்வர் கலாநிதி. ஆறு திருமுருகனின் பணி நயப்பு விழா ஸ்கந்தவரோதயாக் கல்லூரி பிரதியதிபர் எஸ்.தவராஜா தலைமையில் இடம்பெற்றபோது அந்நிகழ்வில் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கும்போதே இவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஆசிரியர்கள் மாணவர்களுக்கு முன்மாதிரியாகத் திகழவேண்டும். ஆசிரியர்களைப் பார்த்துத்தான் தமது எதிர்கால வாழ்வினை மாணவர்கள் தீர்மானிப்பார்கள். 50 வயதிலும் ஆசை வரும் என்பார்கள். ஆறு திருமுருகன் இள வயதில் அதிபர் பதவியினைத் தியாகம் செய்துவிட்டு ஆன்மிகப் பணிக்குச் செல்கின்றார். திருமுருகனின் சமயப் பணி, கல்விப்பணி, சமூகப்பணி ஆழமானது.

மிகச்சிறந்த மாணவர்களாக திகழ்ந்தவர்களே நல்ல ஆசிரியர்களாகவும் நல்ல அதிபர்களாவும் விளங்குவர். அந்த வகையில் ஆறு திருமுருகன் சிறப்புடையவராக விளங்குகின்றார். கடினமான வேலைப்பழுவின் மத்தியிலும் வாசிப்பினை இடைவிடாது செய்பவர். இவரிடம் இருந்து எப்போதும் புதிய கருத்துக்கள் வெளிவரும். நான் கூட அவரிடம் கலந்து ஆலோசிப்பதுண்டு.

ஆசிரியர் பணியும் மாணவர்களை உருவாக்கும் பணியும் பாடசாலைகளுடன் நிற்கும். அதனால் பாடசாலை மாணவர்கள் பாடசாலை ஆசிரியர் அதிபர் மீது மிகுந்த நன்றியுடையவர்களாகக் காணப்படுகின்றனர். இந் நன்றியைப் பல்கலைக்கழகத்தில் எதிர்பார்க்க முடியாது. பல்கலைக்கழகத்திற்கும் நன்றிக்கும் இடமில்லை. இவ்வகையில் மிகச்சிறந்த கல்விப்பணியினை இவர் ஆற்றியுள்ளார்.

சிவபூமிப் பாடசாலையிலிருந்து மாணவன் ஒருவனை ஒலிம்பிக் செல்ல வைத்து பதக்கம் பெறவைத்ததற்கே இவருக்கு ஆறு கலாநிதிப் பட்டங்களைக் கொடுக்க முடியும். இவரது சேவையில் பல சமூக கல்விப் பணியினை இவர் செய்தவர். காய்த்த மரத்திற்கே கல்லெறிவிழும். ஆதலினால் பல விமர்சனங்களை இவர் சந்தித்தவர். எம்மிடையே நன்றி மறக்கும் பாரம்பரியம் உள்ளது. அது இன்றுவரை இருந்து வருகின்றது.

இன்றைய எமது சூழலில் எதற்கும் ஆயத்தம் இல்லாத நிலை காணப்படுகின்றது. படிப்பதற்கு படிப்பிப்பதற்கு, பொதுப் பணிக்கு என பலவற்றிற்கு ஆயத்தமில்லாத சூழலில் கல்விக்கும் சமயத்திற்கும் பொதுப்பணிக்கும் தன்னை அர்ப்பணித்தவர் ஆறு திருமுருகன் என ஸ்கந்தவரோதயாவில் இருந்து பல்கலைக்கழகத்திற்கு வரும் மாணவர்கள் குறிப்பிடுவார்கள். தாம் தமிழும் சமயமும் ஆறு திருமுருகன் ஆசிரியரிடம் படித்தோம். கல்விக் கண்ணைத் திறந்தவர் எனக் குறிப்பிடுவார்கள். இவரது சமய சமூகப்பணி பாராட்டிற்குரியதாகவும் உயர் விற்குரியதாகவும் விளங்குகின்றது எனக் குறிப்பிட்டார்.



யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மைதான அபிவிருத்தி சம்பந்தமான கலந்துரையாடலில் கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் உரையாற்றுவதையும் அருகில் ஒலிம்பிக் போட்டியில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்திய நா.வீரசிங்கம் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள் : தெல்லிப்பழை நிருபர்)

## பருத்தித்துறை வீதி விஸ்தரிப்பு பணிகளுக்காக கட்டடங்களை அகற்றுமாறு வேண்டுகோள்

பருத்தித்துறை நிருபர்,

பருத்தித்துறை வீதி அகலிப்புப் பணிகள் மிக விரைவாக ஆரம்பிக்கப்படவுள்ளதால் வீதி ஓரத்திலுள்ள கடைகள், கட்டடங்களை அகற்றி அவற்றை உட்புறமாக அமைக்குமாறு பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தினால் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னதாக இவ் வீதியோரக் கட்டடங்களை அகற்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.த. ஜெயசீலன், பருத்தித்துறை வர்த்தக சங்கத் தலைவரும் நகரசபை உதவித் தவிசாளருமான சி. பத்மநாதன், கிராம அலுவலர்களான தயாநிதி, யோகேந்திரநாதன் ஆகியோர் இவ் அறிவித்தலை விடுத்துள்ளனர்.

## 'ஒயாகிஸ்' ஆங்கில சஞ்சிகை வெளியீடு

(செட்டிகுளம் நிருபர்)

வவுனியா ஆங்கில சங்கத்தின் ஆதரவில் வெளியாகும் ஆங்கில சஞ்சிகையான ஒயாகிஸ் இரண்டாம் பாகம் எதிர்வரும் 12ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) காலை 11 மணிக்கு வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் பூங்கா வீதியிலுள்ள கேட்போர் கூடத்தில் நிலைய முகாமையாளர் எஸ்.சிவபாலன் தலைமையில் நடைபெறும் இவ் வைபவத்தின் போது பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக பீடாதிபதி பேராசிரியர் ஆர்.நந்தகுமாரனும் சிறப்பு விருந்தினராக சிரேஷ்ட சட்டத்தரணி எம்.சிற்றம்பலமும் வவுனியா கல்வியியல் கல்லூரி அதிபர் கே.பேனாட்டும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக இளைப்பாறிய ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் எஸ்.பூபாலசிங்கமும், புவனநாயகி ஐயம்பிள்ளையும் கலந்து கொள்வுள்ளனர். ஏற்புரையை யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக சிரேஷ்ட ஆங்கில விரிவுரையாளர் கலாநிதி கந்தையாக ஸ்ரீ கணேசன் வழங்குவார். இந் நிகழ்வில் தொடர்பாடலும் கருத்தரங்கின் திறமைகளும் எனும் இறுவட்டும் அன்றைய தினம் வெளியிடப்படவுள்ளது.

## பருத்தித்துறை - கொடிகாமம் பஸ்சேவை சீரில்லை தனியார் சேவையாளர்களால் மக்கள் பாதிப்பு

பருத்தித்துறை,

பருத்தித்துறை- கொடிகாமம் பகுதிகளுக்கு இடையே பயணிகள் சேவையில் ஈடுபடுகின்ற தனியார் போக்குவரத்துச் சேவைப் பேருந்துகளும் சிற்றூர்திகளும் நேரக் கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிக்காமல் தாமதிப்பதால் பயணிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

இதனால் சுமார் 20 கிலோ மீற்றர் தூரத்தினைக் கடப்பதற்கு இரண்டு மணித்தியலயங்களுக்கு மேல் பயணிகள் பேருந்துகளிலேயே காவலிருக்கவேண்டிய நிலையும் தோன்றியுள்ளது. குறிப்பாக கடந்த 3.8. 2012 அன்று நண்பகல்12.25 மணியளவில் பருத்தித்துறை பேருந்துத் தரிப்பிடங்களிலிருந்து சேவையினை ஆரம்பித்த தனியார் பயணிகள் பஸ் சேவை ஒன்று பிற்பகல் 1.45 மணியளவில் கொடிகாமத்திற்குச் சென்றடைந்துள்ளது. 20 கிலோ மீற்றர் தூரத்தினைக் கடக்க சுமார் 80 நிமிடங்கள் வரை பயணிகள் பஸ்ஸிலேயே காத்திருந்தனர். இது தொடர்பாக விசனம் தெரிவித்த மக்களின் கருத்துக்களைக் கூட நடத்துனரும் சாரதியும் கவனத்திலெடுக்காது சுவாமி வீதியுலா வருவதைப்போல் மிகக்குறைவான வேகத்திலேயே பயணித்துள்ளனர். எனவே, இந்த வீதியூடான பயணிகள் சேவையில் ஈடுபடுகின்ற தனியார் போக்குவரத்து சேவையாளர்களும் திட்டமிடல் அதிகாரிகளும் மக்களின் நலனில் அக்கறையுடன் செயற்பட வேண்டுமென பொதுமக்கள் கோருகின்றனர்.

## சிறுவர் துஷ்பிரயோகம் விழிப்புணர்வு கண்காட்சி

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை யாழ்.மாவட்ட அலுவலகத்துடன் இணைந்து நடத்தும் சிறுவர் உரிமைகள், சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான விழிப்புணர்வுக் கண்காட்சி எதிர்வரும் 15ஆம், 16ஆம், 17ஆம் திகதிகளில் காலை 8 மணி முதல் 10 மணிவரை தொடர்ந்து மூன்று நாட்கள் அரசடி வீதி நல்லூரில் அமைந்துள்ள ஜனசக்தி சிறுவர் பூங்கா வளாகத்தில் நடைபெறவுள்ளது.

எனவே அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றனர்.

## நல்லூர் கந்தன் ஆலயத்தின் உற்சவ நிகழ்வுகள்

கோப்பாய்,

நல்லூர்க் கந்தன் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழாவினை முன்னிட்டு இந்து சமயக் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் ஆன்மிக சிந்தனையுடன் கூடிய சிறப்புச் சொற்பொழிவு இன்று (வெள்ளிக்கிழமை), நாளை (சனிக்கிழமை), மறுநாள் (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய தினங்களில் ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

இச் சிறப்புச் சொற்பொழிவினை முறையே சிவத்தமிழ் வித்தகர் கலாபூஷணம் சிவமகாலிங்கம் 'தெய்வவாசம்சு, பிரமச்சாரிய யாக்ரத சைதன்ய சுவாமிகள் நெஞ்சுக்கு நிம்மதி ஆண்டவன் சந்நிதி, இளம் விகடகவி மு.திருநாவுக்கரசு 'சிந்தனை செய்வோம்' என்னும் தலைப்புக்களில் நிகழ்த்தவுள்ளனர். அத்துடன் மல்லாகம் பழம்பதி அறநெறிப் பாடசாலை, நீர்வேலி ஸ்ரீகணேசா அறநெறிப் பாடசாலை, அச்செழு மதுரை மீனாட்சி அம்மன் அறநெறிப் பாடசாலை, ஊரெழு சிவபூரணி முத்தமிழ் மன்ற அறநெறிப் பாடசாலை, அராலி கோமாதா அறநெறிப் பாடசாலை, உரும்பிராய் திருக்குமரன் அறநெறிப் பாடசாலை, வட்டுக்கோட்டை கண்ணகி அம்மன் அறநெறிப் பாடசாலை, அரியாலை ஞானவைரவர் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. இன்றைய தினம் விசேட நிகழ்வாக கங்காநந்தியின் இன்னிசைக் கச்சேரியும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கண்டாவளை வளைஓசைக்கு ஆக்கங்கள் கோரல்

கண்டாவளைப் பிரதேச கலாசாரப் பேரவையில் சென்ற ஆண்டு முதல் பிரதேசத்தில் கலை,கலாசாரம், வாழ்வியல், ஆன்மிகம், மரபுரிமைகள் போன்றவற்றினைப் பிரதிபலிக்கும் வகையில் 'வளைஓசை' எனும் ஆண்டிதழ் வெளியிடப்பட்டு வருகின்றது.

இவ்வருடம் பேரவையால் வளைஓசை (நாதம்-2) நூலினை வெளியிடும் நோக்கில் கண்டாவளை பிரதேசத்திற்குட்பட்ட எழுத்தாளர்கள், கல்விப் புலமையாளர்கள், படைப்பாளிகளிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், (விபரண, ஆய்வு, பத்தி) சிறுகதைகள், ஆவணத்தரவுகள் மற்றும் பிரதேசத்திற்கே தனித்துவமிக்க கிராமியப் பாடல் வகைகள், செவிவழிக் கதைகள் போன்றவற்றினை நூலில் பிரசுரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவை தொடர்பான ஆக்கங்களை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் மலர்க்குழு, பிரதேச கலாசாரப்பேரவை, பிரதேச செயலகம், கண்டாவளை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கலாசாரப் பேரவையின் தலைவரும் உதவி அரசாங்க அதிபருமான த.முகுந்தன் அறிவித்துள்ளார்.

## ஆன்மிக நிகழ்வு

பருத்தித்துறை,

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவிலின் ஆலய சுற்றாடலில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக் கிழமைதோறும் பகல் பூசை நிறைவு பெற்றதும் 10.30 மணியளவில் நடைபெற்றுவரும் ஆன்மிகச் சொற்பொழிவில் எதிர்வரும் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 'கண்ணன் பெருமைகள்' எனும் தலைப்பில் ஆசிரியர் எஸ். சரவணபவனின் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

## இரத்ததான நிகழ்வு

மானிப்பாய்,

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்களின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் இரத்ததான நிகழ்வு ஒன்று செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வினை சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் எஸ்.முரளிதரன் முதலில் தனது இரத்தத்தினைக் கொடையாக வழங்கி ஆரம்பித்து வைத்தார். அதனைத் தொடர்ந்து பட்டதாரிப் பயிலுநர்கள், சமுர்த்தி அலுவலர்கள், கிராம அலுவலர்கள் என பல உத்தியோகத்தர்களும் இவ் இரத்ததான நிகழ்வில் தமது இரத்தங்களைத் தானம் செய்துள்ளனர். இங்கு சுமார் 29பேர் இரத்ததானம் செய்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.



உயரப்புலம் மெதடிஸ்த தமிழ்க் கலவன் பாடசாலையில் தரம் 5 இல் பரீட்சைக்கு தோற்றுகின்ற மாணவர்களுக்கான கற்றாடல் சார் செயற்பாட்டு முகாம் நேற்று முன்தினம் (புதன்கிழமை) பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றபோது விஞ்ஞான ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி க.சோதிதாசன் உட்பட விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவர்களின் செயற்பாட்டை பார்வையிடுவதையும் மாணவர் ஒருவர் ஆசிரியர் ஒருவருக்கு விளக்கம் அளிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்- கே. நந்தகுமார்)

# சிறுவர் துஷ்பிரயோக கட்டுப்படுத்தலில் குடும்ப உறுப்பினர்களின் பங்களிப்பு

இன்று நம் நாட்டிலுள்ள பத்திரிகையினையோ தொலைக்காட்சியினையோ வானொலியினையோ பார்த்தால் நாளாந்தம் அடிபடும் செய்தி சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய செய்திதான்.

சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்கள் ஒரே மாதிரி அமைவதில்லை. நாளுக்கு நாள் வித்தியாசமான முறையில் வேறுபட்ட நபர்களால் நடத்தப்பட்டு வருவதனை அவதானிக்கவும் கேட்கவும் முடிகின்றது.

இப்படியான சிறுவர் துஷ்பிரயோக சீரழிப்பு நடவடிக்கைகளுக்கு பல்வேறுபட்ட பின்னணிக் காரணங்கள் கூறப்பட்டாலும் மிக முக்கியமாக நமது தமிழ்ச் சிறுவர்களின் சீரழிவுக்கு விஸ்வரூபம் எடுத்துவரும் கையடக்கத் தொலைபேசிப் பாவனை, இணையத்தள வசதிகளும் அத்துடன் சிறுவர்களின் பெற்றோர்களும் தான் இதற்குக் காரணம் எனக் கூறலாம்.

**பிள்ளை தனக்கு ஏற்படும் பிரச்சினைகள், சந்தேகங்களை முதலில் பெற்றோரிடம் தான் கேட்டு அறிய முயற்சிக்கும். ஆனால் பலர் அச் சிறுவர்களின் கருத்துக்களை, பிரச்சினைகளைக் கேட்டு அதனைத் தீர்த்து வைக்கக்கூட நேரம் ஒதுக்குவதில்லை. இதனை சாதகமாக பயன்படுத்தும் வெளிநபர்கள் தமது சேஷ்டைகளை பிள்ளைகளிடம் காட்ட முனைகின்றார்கள்.**

உண்மையில் இன்றைய சிறுவர் சீரழிவுகளை பெற்றோர்கள் நினைத்தால் கணிசமான அளவு குறைக்கலாம் என்பதில் எந்தவிதமான சந்தேகங்களும் இல்லை. ஒவ்வொரு பெற்றோர்களும் தமது பிள்ளைகளுக்கு எது தேவை எது தேவையில்லை. யாருடன் பழகுகின்றார்கள். யார் யார் வீட்டிற்கு வருகின்றார்கள். அவர்களிற்கும் எங்கள் பிள்ளைகளுக்கும் என்ன தொடர்பு, வீட்டில் என்ன நடக்கின்றது. என்பதனை நாளாந்தம் அவதானிக்கவேண்டும். இதன் மூலம் பல வேறுபட்ட வேண்டப்படாத செயற்பாடுகளை நிச்சயமாக குறைக்க முடியும்.

இன்று நடைபெற்று வரும் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களை உற்று நோக்கிப் பார்த்தால் அதனை மேற்கொள்பவர்கள் நமக்கு நெருங்கிய உறவினர்கள் அல்லது நன்றாகப் பழகிய நண்பர்கள், அடிக்கடி வீட்டிற்கு வந்து போவோர்கள், அம்மாவிற்கு தெரிந்தவர்கள், அப்பாவிற்குத் தெரிந்தவர்கள் என நமக்கு அறியப்பட்டவர்கள் என்போர்தான் அதிகமாகக் காணப்படுவார்கள்.

ஆனால் நாம் இவ் உறவுகள் இல்லாமல் பிள்ளைகளை வளர்க்க வேண்டும் என சொல்லவில்லை. இன்றைய காலம் மனிதப் பண்புகள் அற்ற இரக்க சுபாவமே அற்ற காமக் கொடூரம் மேலோங்கும் காலமாக மாறிவருகின்றது.

இக்கொடூர செயற்பாடு மாறியுள்ளதா அல்லது மாற்றப்பட்டுள்ளதா என்பது தெரியவில்லை. எது எவ்வாறு இருப்பினும் நாம் பெற்ற எமது மழலைச் செல்வங்களைக் காப்பாற்றி நாட்டில் தலை நிமிர்ந்து நிற்க வைப்பது நம் ஒவ்வொருவரதும் தலையாய கடமையாகும்.

இவ்வாறு இருப்பதனால் எமது பிள்ளைகள் யாருடன் பழகுகின்றார்கள் என்றும் அது யாராக இருந்தாலும் அவர்களிடத்தில் ஒரு கண் வையுங்கள். பிள்ளையின் நடவடிக்கைகளை நன்கு அவதானியுங்கள். மாற்றம் ஏதேனும் தென்படின் அதனை விரிவாக அவதானியுங்கள். தாய், தந்தை இருவரும் இன்றிப் பிள்ளைகளை யாருடனும் தூர இடங்களுக்கு அனுப்புவதை இயலுமானவரை தவிர்த்துக் கொள்ளவேண்டும். குறிப்பாக பெண் பிள்ளைகளிடத்தில் அதிக கவனமெடுக்க வேண்டும்.


அத்துடன் பெற்றோரில் பலர் எமது வேலைகள், எனது படிப்பு, எனது உழைப்பு என அதிக நேரத்தைத் தங்களின் தேவைகளுக்காகச் செலவழிக்கின்றார்கள். அதற்கு மேலாக சில தாய்மார்கள் வீட்டிலிருந்தால் டி.வி.யில் தொடர் நாடகங்களைப் பார்ப்பதில் அதிக நேரத்தைச் செலவிடுகின்றனர்.

இவற்றுடன் ஒப்பிடும் போது எமது அன்புச் செல்வங்களுடன் எவ்வளவு நேரம் செலவிடுகின்றோம். அவர்களது கருத்துக்களை எவ்வளவு கேட்கின்றோம். அவர்கள் சொல்லவருவதை எவ்வளவு பொறுமையுடன் இருந்து கேட்கின்றோம் என்பதனைச் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

பிள்ளை தனக்கு ஏற்படும் பிரச்சினைகள், சந்தேகங்களை முதலில் பெற்றோரிடம் தான் கேட்டு அறிய முயற்சிக்கும். ஆனால் பலர் அச் சிறுவர்களின் கருத்துக்களை, பிரச்சினைகளைக் கேட்டு அதனைத்தீர்த்து வைக்கக்கூட நேரம் ஒதுக்குவதில்லை. இதனை சாதகமாக பயன்படுத்தும் வெளிநபர்கள் தமது சேஷ்டைகளை பிள்ளைகளிடம் காட்ட முனைகின்றார்கள்.

இன்றைய காலத்தில் பலர் தமது தனிப்பட்ட சுதந்திரங்களை அனுபவிப்பதற்காகவும் பொழுது போக்கு விடயங்களில் கவனம் செலுத்துவதற்காகவும் பிள்ளைகளை அங்கே போய் நில், பக்கத்து வீட்டிற்குப் போ, விளையாடி விட்டு வா என அனுப்பி விடுகிறார்கள். ஆனால் அச் சிறுவர், சிறுமியர்கள் எங்கு போய் நிற்கின்றார்கள். என்ன செய்தார்கள் என்பதனை அவதானிக்கத் தவறி விடுகின்றனர்.

இன்று பாடசாலை செல்லும் பிள்ளைகள் கையடக்கத் தொலைபேசியினை வைத்திருக்கிறார்கள். எதற்காகப் பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கு கையடக்கத்தொலைபேசி? எதற்காக அவர்கள் பாடசாலைகளுக்கு, தனியார் கல்வி நிலையங்களுக்கு கையடக்கத் தொலைபேசியினைக் கொண்டு செல்ல வேண்டும்? என்ன தேவை இருக்கின்றது? என இது பற்றி யாரும் அக்கறையுடன் கேட்டுக் கொள்வதில்லை. இதனைச் சற்று சிந்தித்துப் பாருங்கள். ஆகவே பிள்ளைகளை தகாத நடவடிக்கைகளில் ஈடுபடத் தூண்டுவது பெற்றோரா? சமூகமா?



இன்றைய காலத்தில் இணையத்தள வசதிகள் நிச்சயமாக பிள்ளைக்குத் தேவைதான். அதற்காக கணனியைத் தனியொரு அறையில் பொருத்திக் கொடுக்க வேண்டுமா? வெளியான ஓர் இடத்தில் பொருத்தினால் நாமும் அவர்களின் செயற்பாடுகளை அவதானிக்க முடியுமல்லவா? பாடசாலை செல்லும் பிள்ளைகள் இணையத்தளத்தின் மூலம் தமக்குத்தேவையான கல்வி சம்பந்தப்பட்ட விடயங்களை மட்டும் தானே தேட வேண்டும். ஆகவே எதற்காக தனிமை. அவர்களுடன் சேர்ந்து நீங்களும் இருந்து இணையத் தளச் செயற்பாடுகளை அவதானியுங்கள். அப்படிச் செயற்பட்டால் அவருடைய தேடல் நிச்சயமாக கல்விச் செயற்பாடாக மட்டுமே இருக்கும்.

வாரம் ஒரு முறையாவது உங்கள் பிள்ளையின் பாடசாலைக்குச் சென்று அவர்களுடைய நடவடிக்கைகள், ஒழுங்கு, ஒழுங்கீனங்கள், வரவுகள் மாற்றங்கள் என்பனவற்றைப் பாடசாலையினூடாக கேட்டறிய வேண்டும். இதிலிருந்து பல உண்மைகள் உங்களுக்கு நிச்சயமாகக் கிடைக்கும். அதை வைத்துப் பிள்ளையின் நடவடிக்கைகளை நல்ல நிலைக்கு மிகவும் சுலபமாக மாற்றிக் கொண்டுவரமுடியும்.

மேலும் தனிப்பட்ட இரவு, மாலை நேர வகுப்புகளுக்கு (Personal Class) உங்கள் பிள்ளைகளை ஒழுங்கு செய்யும்போது வகுப்பில் என்ன நடக்கின்றது. என்ன கற்பிக்கப்படுகின்றது. என இடையிடையில் சென்று அவதானியுங்கள். இதனால் ஆசிரியரும் உங்கள் பிள்ளையில் அவதானமாக இருப்பார்.

ஆசிரியர் பாடம் படிப்பிக்கத்தானே வந்திருக்கின்றார். வேறு தனிமைப்பட்ட மறைவான வகுப்பிற்கு அல்ல தானே. ஆகவே நீங்கள் இடை இடையில் சென்று அவதானிப்பதை நல்ல ஆசிரியர் கண்டிப்பாக வரவேற்பார்.

பெற்றோர்களை குற்றம் சாட்டவில்லை. பெற்றோர்கள் ஆகிய நீங்கள் மேற்கூறப்பட்ட இவ் விடயங்களில் மிக அவதானத்துடனும் விழிப்புணர்வுடனும் இருந்தால் இச் சிறுவர் துஷ்பிரயோகங்களை இல்லாதொழிக்க முடியும்.

எங்கள் பிள்ளைகளுக்காகவே எங்கள் வாழ்வு. வேறு யாருக்குமாக அல்ல. எங்கள் பிள்ளைகளுக்காக நாம் எதனையும் விட்டுக் கொடுப்போம் எனும் மந்திரத்துடன் பிள்ளைகளுக்காக வாழ்வோம்.

**எஸ்.கே. ஆனந்தன்** (M.com)
மானிப்பாய்

# நான் கண்ட நல்லாசான் கலாநிதி. ஆறுதிருமுருகன்



**சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் அதிபர் கலாநிதி ஆறு திருமுருகன் 01.08.2012 ஆம் திகதி புதன்கிழமை தனது ஆசிரியர் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். அதனை முன்னிட்டு அவரது மகத்தான ஆசிரியப் பணியைப் பாராட்டி இவ் ஆக்கம் வெளிவருகின்றது.**

''தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று''

என்ற வள்ளுவரின் குறள் வாக்கிற்கு இலக்கணமாக வாழ்ந்து கொண்டிருப்பவர் எமது மதிப்பிற்குரிய அதிபர் கலாநிதி ஆறு திருமுருகன் ஐயா. இவர் ஆசிரியத்துவத்தை ஒரு தொழிலாகக் கருதாது நல் மாணாக்கர் பலரை உருவாக்கி அவர்களைக் கற்றறிந்தோர் அவையில் வீற்றிருக்கச் செய்வதற்குரிய ஒரு நல்ல வாய்ப்பாக எண்ணியே பணி செய்தார்.

ஆறுமுகம்- சரஸ்வதி தம்பதிகளுக்கு புதல்வராக 1961 ஆம் ஆண்டு மே மாதம் 28ஆம் திகதி இவர் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை இராமநாதன் கல்லூரியிலும் உயர்கல்வியை யாழ். இந்துக் கல்லூரியிலும் கலைமாணிப் பட்டத்தை பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் பெற்றுக் கொண்டார். 1989ஆம் ஆண்டு காலப்பகுதியில் சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலயத்தில் ஆசிரியப் பணியில் இணைந்துகொண்ட இவர் 1993 ஆம் ஆண்டு சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரிக்கு மாற்றலாகி வந்தார். அப்போதைய அதிபர் விக்னேஸ்வரன், இவரது திறமையைக் கண்டு உயர்தர வகுப்புக்கு இந்து நாகரிகம், இந்து சமயம் என்பவற்றைக் கற்பிக்கும் பொறுப்பை ஒப்படைத்தார்.

1995ஆம் ஆண்டு முதல் 2000ஆம் ஆண்டு வரையிலான ஐந்து வருட காலப்பகுதி ஸ்கந்தாவின் வரலாற்றில் பொற்காலமாகும். ஏனென்றால் இவாது அந்த ஐந்து ஆண்டு காலப்பகுதியில் பல்கலைக்கழக கலைப்பீடத்துக்கு பல மாணவர்களை இவர் அனுப்பி வைத்த பெருமையை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. 1997 ஆம் ஆண்டில் இவர் வகுப்பாசிரியராகவிருந்து இந்து நாகரிகம் கற்பித்து கலைப்பீடத்துக்கு 22 மாணவர்களை அனுப்பினார். இவரிடம் கற்ற 38 மாணவர்கள் இந்துநாகரிக பாடத்தில் அதி விசேட சித்தி (A) பெறுபேற்றைப் பெற்றனர். அதேபோன்று 1998 ஆம் ஆண்டிலும் கலைப்பீடத்துக்கு 15 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் தெரிவானார்கள். யாழ்.மாவட்டத்தின் பல பாகங்களிலிருந்தும் வேறு பாடசாலைகளிலிருந்தும் இவரிடம் கல்வி கற்பதற்காகவே பல மாணவர்கள் ஸ்கந்தாவில் வந்து இணைந்தனர். இவரிடம் கல்விகற்ற பலர் பேச்சாளர்களாகவும் எழுத்தாளர்களாகவும் விரிவுரையாளர்களாகவும் மிளிர்கின்றார்கள்.

கற்பிக்கும் போது இவரிடம் நல்லாசிரியருக்குரிய பண்பு காணப்படும். கற்பித்தல் திறமை (Art of teach), வகுப்பில் மாணவர் அனைவரையும் கட்டுக்கோப்புக்குள் வைத்திருக்கும் திறன், தலைமைத்துவப் பண்பு (Leader ship) என்பன இவரின் தனித்திறன்களாகும். ஒழுக்கம், நற்பண்பு என்பவற்றைப் போதிக்கும் போது அங்கு ஒரு சிறந்த தந்தையாக எம் அனைவரிடமும் கரிசனையுடன் உரிமை எடுத்துத் தண்டிப்பார். ஏழை மாணவர்களுக்கு தனியார் கல்வி நிறுவனங்களில் மேலதிக வகுப்புக்களுக்கு செல்வதற்கு பண உதவியளித்துள்ளார். தற்போதும் அளித்து வருகின்றார்.

இப்படியான ஒருவரை ஸ்கந்தா அன்னை பெற்றமை ஸ்கந்தா சமூகம் செய்த நற்றவமே! அவர் அங்கு ஆசிரியராக கற்பிக்கின்ற காலத்திலும் சரி பின் உப அதிபராக, பிரதி அதிபராக விளங்கிய காலங்களிலும் சரி ஏன் தற்போது அதிபராகக் கடமையாற்றிய காலங்களிலும் கல்லூரியின் சகல நிகழ்வுகளுக்கும் கல்லூரியின் வளர்ச்சிக்கு இவர் தனது சொந்தப் பணத்தில் செலவழித்தமை ஏராளம்.

வன்னியில் நடைபெற்ற இறுதி யுத்தத்தில் பாதிக்கப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு பல்வேறுபட்ட அன்பர்களிடமிருந்தும் நிதி திரட்டி 116 இலட்சம் ரூபாவை இந்து மாமன்ற யாழ். அலுவலகத்தில் வைத்து இவர் வழங்கியுள்ளார். தன்னால் நிர்வகிக்கப்படுகின்ற வயோதிபர் இல்லத்தில் வாழ்கின்ற யாராவது வயோதிபர் இறந்தால்- அவர்களுக்கு யாருடைய ஆதரவும் இன்றி இருந்தால் தானே அவர்களுக்கு இறுதிக் கடமைகளையாற்றியிருக்கின்றார்.

சமய, சமூகப் பணிகளில் தன்னை முழுமையாக இணைத்துக் கொள்வதற்காக அதிபர் பதவியிலிருந்து இவர் ஓய்வுபெறுகின்றார். இவரது ஓய்வு ஸ்கந்தா சமூகத்துக்கு மிகவும் பேரிழப்பாயினும் குறுகிய நோக்கில் - சுயநலத்துடன் நாம் நோக்காது இவரது ஓய்வால் எமது சைவமும் தமிழும் காக்கப்படும் என்பதனால் நாம் அவரது ஓய்வுக்காலம் சிறப்புற அமைய வாழ்த்துகின்றோம்.

ஸ்கந்தாவின் வரலாற்றிலே ஒரு கலாநிதி அதிபர் பதவியை அலங்கரித்தமையை, ஸ்கந்தா அன்னை, ஆறு திருமுருகன் அவர்களினூடு பெற்றுள்ளாள். இவர் அதிபராக இருந்த இந்த 5 வருட காலப்பகுதியில் ஸ்கந்தாவின் தோற்றப் பொலிவை முற்றாக மாற்றியமைத்து விஞ்ஞான ஆய்வு கூடம், தகவல் தொழில்நுட்பவியல் கூடம், நிர்வாகக் கட்டடம், கணனிக்கூடம், விவசாய ஆய்வுகூடம் என்று பலவற்றை இசுறுவின் திட்டத்தின் மூலம் சிறந்த அடுக்கு மாடிக் கட்டடங்களுடன் புதுப்பொலிவுடன் மாற்றியமைத்ததுடன் சிறந்த அபிவிருத்தியடைந்த ஒரு பாடசாலையாக ஸ்கந்தா தற்போது திகழ்கின்றது. இவரது இந்த அளப்பரிய சேவைகள் ஸ்கந்தா வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டு ஆண்டாண்டு காலமாக நீடித்து நிலைக்கும்.

எப்படியும் வாழலாம் என்று வாழுகின்ற சமூகத்துக்கு 'இப்படித்தான் வாழவேண்டும்' என்று வாழ்ந்து காட்டுகின்ற உதாரண புருஷராக (Role model) இவர் திகழ்கின்றார். இவரது வாழ்வும் வளமும் மென்மேலும் சிறக்கவும் இவரது சமய, சமூகப் பணிகள் மேன்மையுறவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**லயன் தெல்லியூர் சி. ஹரிகரன்**
(உறுப்பினர், வலி. வடக்கு பிரதேச சபை)

# யாழ்ப்பாணத்தில் திரை அரங்குகளின் தோற்றமும் வளர்ச்சியும்

## தெய்வேந்திரா சினிமா (1960 - 1990)

தென்மராட்சிப் பகுதியில் 1960 களில் ஓரிரு அரங்குகள் தோன்றி இருந்தன. 1960 ஆம் ஆண்டு விசாலமான திரை அரங்காக நவமணி என்பவரால் தெய்வேந்திரா திரை அரங்கம் அமைக்கப்பட்டது. இது சாவகச்சேரி பஸ் நிலையத்துக்கு அருகில் அமைக்கப்பட்டது. யாழ்நகரில் திரையிடப்பட்ட புதிய திரைப்படங்களும் இங்கு திரையாகின. எம்.ஜி.ஆர்., ரஜனி, கமல் ஆகியோரின் படங்கள் திரையிடப்பட்டன. பின்னர் இவ்வரங்கம் உரிமையாளருக்கு ஏற்பட்ட நஷ்டத்தினால் 1990 களில் மூடப்பட்டு விட்டது.

## வேல் சினிமா (1980 - 1990)

பொன்னையா கிருஷ்ணராசா என்பவரால் 1980 களில் வேல் சினிமா என்ற பெயரில் அரங்கொன்று நடத்தப்பட்டு வந்தது. அது சில வருடங்களில் நிறுத்தப்பட்டு பொன்னையா கிருஷ்ணராசா 2005 இல் பாலா சினிமா அரங்கு என்ற பெயரில் ஒரு அரங்கினை ஆரம்பித்தார். இதில் இடையிடையே ராஜா, மனோகரா திரை அரங்கில் திரையாகும் திரைப்படங்களும் திரையிடப்பட்டன.

## ராஜ் திரை அரங்கு (1980 - 1990)

தீவகப் பகுதிகளில் காணப்பட்ட ஒரேயொரு திரை அரங்காக ராஜ் திரை அரங்கு விளங்கியது. இவ் அரங்கு 1980 களில் சுருவில் வீதியில் சிவன் கோவிலுக்கு அண்மையில் இருந்த வெற்றுக் காணிக்குள் இம்மனுவேல் என்பவரால் அமைக்கப்பட்டது. முற்றிலும் தகரக் கொட்டகையாக அமைக்கப்பட்ட இவ்வரங்கில் யாழ் நகரிலே திரையிடப்பட்ட திரைப்படங்கள் திரையிடப்பட்டன. தீவகப் பகுதியில் இருந்த ஒரே ஒரு திரை அரங்கு என்பதால் தீவக மக்களிடம் பெரும் வரவேற்பை பெற்று இயங்கிய போதும் 1990 இல் இடை நிறுத்தப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் தோற்றம் பெற்ற திரையரங்குகள் முதன் முதலில் தகரங்களால் வேயப்பட்ட தகரக் கொட்டகைகளாகவே அமைக்கப்பட்டன. மேற்கத்தேய கலப்பினப் பண்பாடுகளின் விளைவாக கட்டடக்கலைப் பண்புகள் தோற்றம் பெற ஆரம்பித்தன. இதன் விளைவாக திரையரங்குகளுக்கு முன்னால் முகப்புக் கட்டும் வழக்கம் உருவானது. இம்முகப்புக்கள் திரையரங்கினை பாரிய கட்டட அமைப்பாக அடையாளம் காட்டுவதற்கு இவை அமைக்கப்பட்டன. இம்முகப்புக்கள் ரொக்கொக்கோ மற்றும் பாருக்கோ கட்டட அம்சங்களுக்குரிய பண்புகள் சிலவற்றினைக் கொண்டவையாக அமைந்திருந்தன. மேற்கத்தேயத்தில் ஆரம்பத்தில் இருந்த திரையரங்குகளின் தோற்றத்தினைக் கொண்டே அமைக்கப்பெற்றிருந்தன என்பது இவ்வாய்வின் மூலம் பெறப்பட்ட புகைப்படங்களின் ஆவணங்களின் மூலம் அறியக் கூடியதாக இருந்தது.

(முற்றும்)

**- ஆர். அஜித்**

# வெள்ளாங்குளத்திற்கு நீர் கொண்டு செல்லமுடியாது நிறுத்தாவிடின் மக்கள் போராட்டம் வெடிக்கும்

## முன்னாள் அரசாங்க அதிபர் இராசநாயகம்

(யாழ்.மத்தி நிருபர்)

பூநகரி- முழங்காவில் பிரதேசத்தின் கூட்டுறவுப் பண்ணையிலுள்ள நீர் நிலைகளிலிருந்து மன்னார் வெள்ளாங்குளப் பகுதிக்கு குழாய் மூலம் குடிதண்ணீர் கொண்டு செல்லும் திட்டத்தை தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபை உடனடியாக நிறுத்தவேண்டுமென முன்னாள் கிளிநொச்சி அரசாங்க அதிபரும் மகாதேவா சிறுவர் இல்லத் தலைவருமான தி.இராசநாயகம் கடுமையாக எதிர்த்துள்ளார்.

மேற்படி விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;பூநகரி முழங்காவில் பிரதேசம் கிளிநொச்சி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்டதாகும். ஆனால் கிளிநொச்சி அரசாங்க அதிபரின் அனுமதியோ அல்லது பூநகரிப் பிரதேச செயலரின் அனுமதியோ இன்றி முழங்காவிலிலிருந்து வெளிமாவட்டமான மன்னார் மாவட்ட வெள்ளாங்குளப் பிரதேசத்திற்கு அனுமதியற்ற முறையிலும் 2000 குடும்பங்களை பாதிப்படையச் செய்யும் வகையிலும் முழங்காவிலிலிருந்து வெள்ளாங்குளத்திற்கு நீரை எடுத்துச்செல்லும் திட்டத்தினை தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் முன்னெடுக்கின்றனர்.

இதனால் இப்பிரதேச மக்கள் பாதிப்படைகின்றனர். இத்திட்டத்தினை உடன் நிறுத்தவேண்டும். இல்லாவிடில் முழங்காவில் மக்களை ஒன்றுகூட்டி யாழ்.தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினருக்கு எதிராக மக்கள் போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம்.

இத் திட்டத்தினை நிறுத்தாவிடின் மக்கள் போராட்டம் வெடிக்கும் எனவும் தெரிவித்தார்.

# இலங்கை திரும்புவதில் தமிழக அகதிகள் ஆர்வம்

சென்னை:

இலங்கையில் போர் முடிந்து அமைதி திரும்பியுள்ள நிலையில் தமிழக அகதிகள் முகாமில் தங்கியுள்ள தமிழர்கள் சொந்த ஊருக்கு திரும்புவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். தற்போது வரை இரண்டு இலட்சத்திற்கும் அதிகமானோர் இலங்கைக்குத் திரும்பி விட்ட நிலையில், அங்கிருந்து தமிழகத்திற்கு தமிழர்கள் அகதிகளாக வருவது முற்றியும் குறைந்து விட்டதாக அகதிகள் மறுவாழ்வுத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து தமிழக ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில்,

இலங்கையில் தொடர்ச்சியாக காணப்பட்ட போர் சூழ்நிலைகளால் தங்கள் உயிர்களை காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டு இலங்கைத்தமிழர்கள், தமிழகத்துக்கு அகதிகளாக வர ஆரம்பித்தனர். அப்போது தமிழகத்தின் பல்வேறு இடங்களில் அமைக்கப்பட்ட முகாம்களில் தங்க வைக்கப்பட்ட அவர்களுக்கு, தமிழக அரசின் சார்பில் இலவச அரிசி, இலவச கல்வி, மாதந்தோறும் உதவித் தொகை போன்றவை வழங்கப்பட்டன.

அவற்றுடன் தற்போது, தமிழக மக்களுக்கு அரசு வழங்கும் திருமண உதவித் திட்டம், ஓய் வூதியம், மருத்துவ வசதி உள்ளிட்ட அனைத்துத்திட்டங்களும் இலங்கை அகதிகளுக்கும் வழங்கப்படுகின்றன. இந்நிலையில், இலங்கையில் போர் முடிந்து அமைதி திரும்பிய பகுதிகளுக்கு, இலங்கைத்தமிழ் அகதிகள் சென்று கொண்டிருக்கின்றனர். இவர்கள் அனைவரும் அவரவரின் விருப்பப்படி, திரும்பி அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

மேலும், இவர்கள் நாடு திரும்ப பயணக்கட்டண வசதியும் செய்து தரப்படுகிறது. இதுதவிர, ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் தூதரகம் மூலமும் சிலர், சொந்த நாட்டுக்குச் செல்கின்றனர்.

இவர்களுக்கு சொந்த ஊரில் வாழ்க்கையை ஆரம்பிக்க அனைத்து வசதிகளையும் ஐக்கிய நாடுகள் சபை ஏற்படுத்தித்தருகிறது. தற்போது வரை இரண்டு இலட்சத்திற்கும் அதிகமானோர், இலங்கைக்குத் திரும்பி விட்டனர்.

# டெல்றொக்ஷனின் வீட்டிற்கு பொலிஸார் பாதுகாப்பு

(எம்.நியூட்டன்)

கோமாவில் இருந்து உயிரிழந்த அரசியல் கைதியின் வீட்டை அண்டிய பகுதிகளில் பொலிஸாரினால் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா சிறைச்சாலையில் கடந்த மாதம் இடம்பெற்ற அசம்பாவிதத்தையடுத்து அங்கிருந்து அநுராதபுரம் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட பின்னர் அங்கிருந்த சிறைச்சாலை அதிகாரிகளினால் கடுமையான தாக்குதலுக்கு இலக்காகி கோமா நிலையிலிருந்த மற்றுமொரு அரசியல் கைதி நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் பாஷையூரைச் சேர்ந்த மரியதாஸ் நெவில் டெல் றொக்ஷன் (வயது 36) என்பவரே பலியானவராவார்.

மரணமடைந்தவரது சடலம் ராகம வைத்தியசாலையில் சடலப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து இன்று யாழ்ப்பாணம் எடுத்து வரப்படவுள்ள நிலையில் குறித்த வீட்டைச் சுற்றிய பகுதியில் பொலிஸார் பாதுகாப்புக்காக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

# ஒலிபெருக்கியின் ஓசையை தணிக்குமாறு மதத் தலங்களுக்கு அறிவுறுத்தல்

## வவுனியா பிரதேச செயலாளர்

ஓமந்தை.

மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு இடையூறினை ஏற்படுத்தாத வகையில் வழி பாட்டுத் தலங்கள் தமது ஒலிபெருக்கியின் ஓசையை தேவையேற்படின் வழிபாட்டுத் தலங்களுக்குள் மட்டுப்படுத்துமாறு வவுனியா பிரதேச செயலாளர் அ. சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார். இவ் விடயம் தொடர்பாக அவர் சகல மத வழிபாட்டுத் தலங்களின் நிர்வாகத்திற்கும் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது,

பிரதேச செயலக பிரிவில் அமைந்துள்ள மத வழிபாட்டுத் தலங்களில் பொருத்தப்பட்டு தினமும் காலை, மாலை ஆகிய இரு வேளைகளிலும் அதீத ஒலியுடன் ஒலிபரப்பப்படும் ஒலி பெருக்கிகளால் தமது கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்கு பெரும் இடையூறு ஏற்படுவதாக மாணவர்கள் மற்றும் பெற்றோர் உட்பட நலன் விரும்பிகள் தொடர்ச்சியாக முறைப்பாடு செய்து வருகின்றனர்.

உயர்தரப் பரீட்சை ஆரம்பமாகி ஒரு மாத காலம் நடைபெறவுள்ளதுடன் 5 ஆம் தரம் புலமைப்பரிசில் பரீட்சையும் சம காலத்தில் நடைபெறவுள்ளது. எனவே மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு எந்த வகையிலும் இடையூறு ஏற்படாத வகையில் நடந்து கொள்வது அனைவரது கடமையும் பொறுப்புமாகும். மத வழிபாட்டு முறைகளை அனுசரிக்க வேண்டிய அதே வேளை கல்வியின் மூலமான வளம் மிக்க சந்ததியை தோற்றுவிக்க வேண்டிய அவசியமும் எம் எல்லோருக்கும் உள்ளது.

ஆகவே வழிபாட்டு தலங்களில் ஒலிபெருக்கிகளை பயன்படுத்த வேண்டிய தேவையேற்படின் அவற்றை வழிபாட்டுத் தலங்களின் உட் பாவனைக்கு மட்டும் தணிக்கப்பட்ட ஓசையில் ஒலிபெருக்கிகளை பயன் படுத்துவதற்கு ஏற்ற நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**சட்டவிரோதமான...**(தொடர்ச்சி)

என்.சுதாகரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் மிகப்பெரிய குளமான இரணைமடுக் குளத்தின் கீழ் இம்முறை 2012ஆம் ஆண்டு சிறுபோக நெற்செய்கையில் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பயிர்ச்செய்கைகள் நீரின்றி அழிவடைந்துள்ளன. இது தொடர்பாக ஊடகங்களிலும் பல்வேறு தரப்பினருடன் பல தரப்பட்ட கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன. இது தொடர்பில் அவர் யாழ் ஓசைக்குக் கருத்துத் தெரிவிக்கும் பொழுது இவ்வாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

2012 ஆம் ஆண்டு இரணைமடுக் குளத்தில் 30.1 அடி நீர் தேக்கப்பட்டது. அதனடிப்படையில் ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்ட சிறுபோக நெற்செய்கை திட்டக்குழுக்களின் கூட்டங்களின் போது ஏப்ரல் மாதத்தில் குளத்தில் காணப்படுகின்ற நீரின் அளவை வைத்துக்கொண்டு இரணைமடுக் குளத்திற்கு கீழான சிறுபோக நெற்செயகையின் பரப்பு தீர்மானிக்கப்படும் அதனடிப்படையில் 2012 ஏப்ரல் மாதம் குளத்தின் நீர் கொள்ளளவு 28 அடியாக இருந்தமையால் மாவட்ட அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் கச்சேரியில் இடம்பெற்ற கூட்டத்தின் போது சிறுபோக நெற்செய்கை பரப்பளவு 8000 ஏக்கர் எனத் தீர்மானிக்கப்பட்டது. அதாவது குளத்தின் வலது கரையில் கீழ் 1340 ஏக்கரும் இடது கரையின் கீழ் 6300 ஏக்கரும் ஏற்றுநீர்ப்பாசனத்திட்டத்தின் கீழ் 300 ஏக்கர் என்ற அடிப்படையில் மேற்படி 8000 ஏக்கர் தீர்மானிக்கப்பட்டது.விவசாயிகள் திட்டக்குழுக் கூட்டங்களின் போது எடுக்கப்பட்ட தீர்மானங்களின் படி விதைப்புக் கால அட்டவணைகளுக்கு ஏற்ப தங்களது விதைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். ஆனால் பல விவசாயிகள் அவ்வாறு நடந்த கொள்ளவில்லை. அதாவது காலம் பிந்திய விதைப்புக்கள் மற்றும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பங்குகளுக்கு மேலதிகமாக சட்ட விரோத விதைப்புகளிலும் ஈடுபட்டதாலும் அத்தோடு சட்டவிரோதமாக நீரைப் பெறும் நடவடிக்கையிலும் ஈடுபட்டமையும் பாதிப்புகளுக்கு ஒரு காரணமாக அமைந்து விட்டது. அதாவது இந்தத் தடவை இரணைமடுக் குளத்தின் கீழ் தீர்மானிக்கப்பட்ட 8000 ஏக்கருக்கு மேலாக 2000 ஏக்கருக்கு மேற்பட்ட சட்டவிரோத விதைப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

எனவே இவ்வாறான நிலைமைகளோடு நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கடும் வறட்சியும் இந்த அழிவுகளுக்கு காரணமாக அமைந்து விட்டன. விவசாயிகள் குறிப்பிடுவது போன்று சட்டவிரோத விதைப்புகளும் சட்டவிரோத நீர்பெறுகின்ற நடவடிக்கைகளும் கடந்த பல ஆண்டுகள் நடைபெற்று வந்தபோதிலும் பயிர்ச்செய்கை பாதிக்கப்படவில்லை. ஆனால் இம்முறை பாதிக்கப்பட்டிருக்கின்றது. அதற்கு காரணம் குளத்தின் நீர்மட்ட அளவினை நீர்ப்பாசனத் திணைக்களம் குறைத்து சேமித்தமையாகும் எனக் கூறுவதில் எவ்வித உண்மையும் இல்லை.

அதாவது கடந்த காலங்களில் சட்டவிரோத விதைப்புகளும், சட்டவிரேத நீர்பெறும் நடவடிக்கைகளும் இடம்பெற்றிருந்தாலும்கூட கோடையில் பெய்த மழையால் குளத்து நீரளவு உயர்த்தப்பட்டு அவை பாதுகாக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் 2012ஆம் ஆண்டு கோடை மழை இன்மையாலும் நாட்டில் நிலவுகின்ற கடும் வரட்சியினாலும் இந்த நிலைமை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

வழமை போன்று குளத்தின் நீர் மட்டம் 30.1 அங்குலமாக இருந்தபோதும் ஏப்ரல் மாதத்தில் 28 அடியாகக் குறைந்தமைக்கு பெரும்போக பயிர்ச்செய்கைக்காக இறுதிக் காலத்தில் நீர் திறந்த விடப்பட்டமையும் வரட்சியினால் நீர்வற்றியதுமே காரணமாகும். எனவே பலரும் குறிப்பிடுவதுபோன்று வேறு எந்தக் காரணமும் இதில் இல்லை.

வறட்சியினால் மாவட்டத்தின் கீழான ஏனைய குளங்களின் கீழான நெற்செய்கையும் பாதிக்கப்படாமல் இருக்க எவ்வாறு இரணைமடுக் குளத்திற்குக் கீழான நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது எனச் சிலரால் எழுப்பப்படும் கேள்விகளுக்கும் என்னிடம் பதிலுண்டு.

அதாவது மாவட்டத்தில் ஏனைய குளமான புதுமுறிப்பு, அக்கராயன், கல்மடு, வன்னேரிக்குளம் போன்ற குளங்களின் கீழான நெற்செய்கை பாதிக்கப்பட்டமைக்கு காரணம் புதுமுறிப்புக் குளத்தின் கீழான நெற்செய்கைப் பரப்பளவு குறைக்கப்பட்டதோடு குளம் 108 மில்லியன் ரூபா பெறுமதியில் இந்த வருடம் புனரமைக்கப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

அடுத்ததாக அக்கராயன் குளம் கடந்த வருடம் பல மில்லியன் ரூபா பெறுமதியில் புனரமைக்கப்பட்டு நீரின் கொள்ளளவு அதிகரிக்கப்பட்டதோடு அதன் கீழான நீர்ப்பாசன வாய்க்கால்களும் புனரமைக்கப்பட்டன. அக்குளத்திற்கு மேற்குப் பக்கமாக உள்ள முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு சொந்தமான சிறுகுளங்களை புனரமைப்புக்காக அக்குளங்களின் நீர் முற்றாக திறந்துவிடப்பட்டதினால் அந்நீர் அக்கராயன், வன்னேரிக் குளங்களில் மேலதிகமாக சேமிக்கப்பட்டமையும் ஒரு காரணம். அத்தோடு அவ் விசாயிகள் விதைப்புக் கால அட்டவணையைப் பயன்படுத்தி ஒத்துழைப்பு வழங்கியமையும் அடுத்த குளங்களின் கீழான நெற்செய்கை பாதிக்கப்படாமைக்கு காரணமாக அமைகின்றது.

**இ.போ.ச...**(தொடர்ச்சி)

பாதிப்படைவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

தினமும் பாதிக்கப்படுகின்ற அரசாங்க உத்தியோகத்தர்களால் இவ்விடயம் தொடர்பாக சாலை முகாமையாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட போது எழுத்து மூலமாகத் தருமாறும் பத்திரிகைகளில் பிரசுரிக்குமாறும் பொறுப்பற்ற முறையில் சாலை முகாமையாளர் பதிலளித்ததாகவும் அரசாங்க உத்தியோகத்தர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக அரசாங்க உத்தியோகத்தர்கள் தெரிவிக்கையில்-

பருத்தித்துறைச் சாலையினுடைய அரச போக்குவரத்துச் சேவை ஊர்திகள் சேவையினை ஆரம்பிக்கும் போதும் முடிவுறுத்தும் போதும் நேர ஒழுங்கு விதிகளைப் பின்பற்றுவதில்லை. இதனால் அரசாங்க ஊழியர்கள் சில சமயங்களில் சேவையினைப் பெறமுடியாது பேருந்துகளைத் தவறவிடுகின்றனர்.

குறிப்பாக பருத்தித்துறை - யாழ்ப்பாணத்திற்கு இடையேயான 'கச்சேரி பஸ்' என அழைக்கப்படுகின்ற அரசாங்க உத்தியோகத்தினருக்கான பேருந்தின் சாரதிகள் தினமும் மாறுபட்ட நேரங்களிலேயே சேவையை ஆரம்பிக்கின்றனர். இதனால் பருவகாலச் சீட்டில் பயணிக்கின்ற அரசாங்க உத்தியோகத்தர்கள் உரிய சேவையினைப் பெறமுடியாதுள்ளது.

இதேபோல் வடமராட்சி கிழக்குப் பகுதிக்கான சேவையும் சீரான முறையில் நேர ஒழுங்குடன் நடைபெறுவதில்லை. இப்பிரதேசத்திற்கு மிகவும் பழுதடைந்த பேருந்துகளைச் சேவைக்குப் பயன்படுத்துவதால் அதிகமான நாட்களில் பேருந்துகள் பழுதடைந்து சேவையைத் தொடரமுடியாது மக்கள் பாதிக்கப்படுகின்றனர்.

இவ்விடயங்கள் தொடர்பாக சாலை முகாமையாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்படும் பொழுது சாலை முகாமையாளர் தன்னால் எழுதுவுமே செய்யமுடியாது என அரசாங்க உத்தியோகத்தர்களுக்குத் தெரிவித்துள்ளார். மேலும் குறைகளை பத்திரிகைகளில் பிரசுரித்தால் தன்னால் நடவடிக்கை எடுக்கமுடியும் எனவும் தெரிவித்துள்ளார். எழுத்து மூலம் தருமாறும் கேட்டுள்ளார்.

எனவே இவ் விடயத்துடன் தொடர்புடைய வழிகளில் நடவடிக்கை எடுத்து இலங்கைப் போக்குவரத்து சபையின் பருத்தித்துறைச் சாலையூடான சேவையினை பொதுமக்களுக்கும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் ஏற்றவகையில் மேற்கொள்ள வேண்டுமெனவும் வேண்டுகின்றனர்.

**செல்வந்தர்களை...**(தொடர்ச்சி)

பணம், நகைகளை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இக்கொடூரச் சம்பவம் கோப்பாய் இராச வீதியில் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் கோப்பாய் தெற்குப் பகுதி- கோப்பாய் பழைய வீதியைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தாயாரான குமாரசாமி மங்கையற்கரசி (வயது 70) என்பவரே கொலை செய்யப்பட்டவராவார்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது;

குறித்த பகுதியில் வசித்துவரும் மூதாட்டி தனிமையில் வசித்து வருவதுடன் 4 பிள்ளைகளும் வெளிநாட்டில் வசித்து வருகின்றனர். இவர் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் மாறிமாறி வசித்து வருகிறார்.

சம்பவ தினமான நேற்று வியாழக்கிழமை காலை அயல் வீட்டில் உள்ள ஒருவர் கையடக்கத் தொலைபேசியை சார்ஜ் செய்வதற்காக குறித்த வீட்டிற்கு சென்றபோது மூதாட்டி இறந்த நிலையில் இரத்த வெள்ளத்தில் சடலமாகக் காணப்பட்டுள்ளார்.

உடனடியாக அயலவர்களும் உறவினர்களும் கோப்பாய் பொலிஸாருக்கும் கிராம அலுவலருக்கும் தெரிவித்ததையடுத்து பொலிஸார் தொடர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விசாரணைகளின் போது மூதாட்டியை கொலை செய்தமைக்கான அடையாளம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மின்சார வயரினைப் பயன்படுத்தி தடி ஒன்றினால் கழுத்தினை நெரித்துக் கொலை செய்ததற்கான தடயம் வீட்டில் 20 மீற்றர் தூரத்திலுள்ள மரத்தின் அடியில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

இதேவேளை இச் சம்பவம் தொடர்பில் உறவினர் மற்றும் அயலவர்கள் தெரிவிக்கையில்-

குறித்த மூதாட்டியின் கணவன் 7 வருடத்திற்கு முன் இறந்துவிட்டார். அதன் பின்னர் தனிமையிலேயே இருந்தார். இவர் வெளிநாட்டில் வசித்த அவர்களுடைய பிள்ளைகளின் உதவியுடன் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் வசித்து வந்தார்.

யாழ்ப்பாணத்தில் தனது வீட்டில் அயலில் உள்ளவர்களுடன் நட்புடனே வசித்து வந்தார். வீட்டிற்கு முன்பாகவுள்ள ஆலயத்திலேயே அடிக்கடி இருப்பார். யாழ்ப்பாண வீட்டின் வேலியை அடைப்பதற்கு 50 ஆயிரம் ரூபா பணம் வைத்திருந்ததுடன் நகைகளும் வைத்திருந்ததாக தெரிவிக்கின்றனர்.

மேலும் இறுதியாக புதன்கிழமை இரவு வெளிநாட்டில் உள்ளவர்களுடனும் கொழும்பில் உள்ளவர்களுடனும் கதைத்துள்ளதுடன் இரண்டு வாரத்திற்குள் வெளிநாட்டிலுள்ள தனது மகளது வீட்டிற்குச் செல்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டதாகவும் தெரிவித்தனர்.

**நவநீதம்பிள்ளை...**(தொடர்ச்சி)

ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது,

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையாளர் நவநீதம் பிள்ளை உட்பட ஐ.நா. அதிகாரிகள் இலங்கை வரலாம். வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தி நடவடிக்கைகளை பார்வையிடலாம். அவர்களை நாங்களே அழைக்கின்றோம்.

ஆனால் அவர்கள் இங்கு வந்து ஆலோசனைகளை வழங்க முடியாது. அப்படி செய்யுங்கள் இப்படி செய்யுங்கள் என்று கூற முடியாது. அவ்வாறு அவர்கள் கூறினாலும் ஒன்றையும் ஏற்கமாட்டோம். காரணம் அவர்கள் கூறுவதை எம்மால் தடுக்க முடியாது. ஆனால் ஏற்கமாட்டோம்.

வடக்கு, கிழக்கில் அரசாங்கம் குறைவாக வேலை செய்கின்றது என்று குற்றச்சாட்டு உள்ளது. எனவேதான் இவ்வாறு அழைப்புக்களை மேற்கொள்கின்றோம். குறிப்பாக பிரிட்டிஷ் எம்.பி.க்கள் குழுவினர் அண்மையில் இலங்கை வந்து யாழ்ப்பாணம் சென்று நிலைமைகளை பார்வையிட்டனர்.

அவ்வாறு நாங்கள் தமிழகத்தின் வைகோவுக்கும் ஜெயலலிதாவுக்கும் அழைப்புவிடுக்கின்றோம். காரணம் நாங்கள் செய்யும் வேலைத்திட்டங்களை காட்டவேண்டும். இவ்வாறுதான் ஐ.நா. அதிகாரிகளையும் அழைக்கின்றோம். ஆனால் ஆலோசனைகளை ஏற்கமாட்டோம்.

**மரணதண்டனை...**(தொடர்ச்சி)

பாதுகாவல்களும் பொலிஸாரும் வைத்தியசாலைக்கு கொண்டு கொண்டு சென்றதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்தார்.

கடந்த ஆறு வருடங்களுக்கு முன் ஹட்டன் வனராஜா கீழ் பிரிவு டிக்கோயா தோட்டத்தில் தீயினால் இறந்த ராம்தாஸ் லிங்கேஸ்வரி வயது 30 என்ற குடும்ப பெண்ணின் மரணத்துடன் தொடர்புடையதாக கூறப்படும் அவரின் கணவரான இராமையா கிருஷ்ணமூர்த்திக்கு (வயது 32) நுவரெலியா உயர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையின் பின் நேற்று வியாழக்கிழமை தீர்ப்பு வழங்கப்பட்டது.

இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நுவரெலியா உயர் நீதிமன்ற நீதிபதி எம்.எம்.ஏ.கபூர் சம்பந்தப்பட்டட இராமையா கிருஷ்ண மூர்த்திக்கு மரணதண்டனை விதித்து திர்பபு வழங்கினார். இதன் போது மரணதண்டனை கைதி தன்வசம் வைத்திருந்த சவரம் செய்யும் பிளேடால் தன் கழுத்தை வெட்டி தற்கொலை செய்துக்கொள்ள முயற்சி செய்துள்ளார்.

இதை கண்ட பாதுகாவலர் உத்தியோகத்தர்கள் இவரை பலத்த பாதுகாப்புடன் நுவரெலியாக பொது வைத்தியசாலைக்கு கொண்டு சென்று சிகிச்சை வழங்கியுள்ளார்கள்.

**குடாநாடு...**(தொடர்ச்சி)

ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் 24 மணிநேர மின்சாரம் வழங்கப்படும் என மின்சார சபையின் உயர் அதிகாரியினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை பரீட்சைக்குத் தயார்படுத்தும் முகமாக மாணவர்கள் கல்வி கற்கும் அதிகாலைநேரம் 3.30 மணிமுதல் பரவலாக மின்சாரம் செயலிழந்தமையால் தாம் பெரும் பாதிப்புக்குள்ளாகியதாக பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் கவலையுடன் தெரிவித்துள்ளார்கள்.

இது சம்பந்தமாக சுன்னாகம் மின்சார நிலைய உயர் அதிகாரியுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது,

அதிகாலை பெய்த மழையினால், மின் மாற்றிகளில் படிந்திருந்த தூசுகளினால் மின்மாற்றிகள் செயலிழந்ததாகவும் அதனால் மின்சாரம் தடைப்பட்டது எனவும் தற்போது பகல் முழுவதும் உரிய மின்மாற்றிகள் திருத்தப்பட்டு மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

வீதித் திருத்தம் காரணமாக மின்மாற்றிகளில் அளவுக்கதிகமான தூசுகள் படிவதாகவும் மழையினாலேயே இத்தகைய பாதிப்புக்கள் ஏற்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

**யாழிலிருந்து...**(தொடர்ச்சி)

கூட்டத்தில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஆகஸ்ட் மாதம் 31ஆம் திகதிக்குள் மின்சாரம் வழங்கி ஒளியேற்றப்படவேண்டும் என பணித்திருந்தார். இதனையடுத்து நேற்று துரித அபிவிருத்தி திட்டதின்கீழ் வேலணை பிரதேச சபைக்குட்பட்ட மண்டைதீவுக்கு மின்சாரம் வழங்கும் பணி துரிதகதியில் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை செட்டிக்குளம் மற்றும் வேலணை கோபுரத்தடி வைரவர் ஆலயம், வேலணை அதிசய வைரவர் ஆலய வீதி என்பவற்றுக்கும் புங்குடுதீவு பிரசேதத்திற்கும் மண்டைதீவுக்கான வேலைத் திட்டங்கள் பின்னர் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.




கொண்டு அது உண்மையில் நடந்தது போல விவரித்துப் பேசுதலும் சில சமயம் இவர்கள் எப்போதும் மன அழுத்தத்துடனும் அளவுக்கு மீறிய எச்சரிக்கை உணர்வுடனும் தனித்தே இருப்பர். ஆயினும் இவர்களுடைய சமூக உறவுகள் அதிகமாகப் பாதிக்கப்படுவதில்லை. சந்தேக எண்ணங்களைத் தவிர பிற




# மனநோய் என்பதை தகுந்த நேரத்தில் கண்டறிதல் அவசியம்



சந்தேகம் சார்ந்த மனச்சிதைவு நோய் இது. பெரும்பாலும் நடுத்தர வயதினருக்கே வரும். 30 வயதுக்கு மேல்தான் தோன்றுகிறது. தவறான நம்பிக்கைகள் மேலோங்கி நிற்கும். அவை மிகவும் பொருத்த மற்றும் உண்மை நிலைக்கு புறம்பாகவும் இருக்கும்.

எவ்வளவுதான் தர்க்க ரீதியாக விளக்கம் கொடுத்தாலும் கூட இந்த தவறான நம்பிக்கைகளை நோயாளியின் மனதிலிருந்து அகற்றுதல் கடினம். அந்த அளவுக்கு அவை வேரூன்றியிருக்கும்.

நோய் வருவதற்கு முன் இவர்கள் கொண்டிருந்த குண இயல்புகளை ஆராய்ந்தால் இவர்கள் சமூக உறவுகள் மிகவும் குறை உடையனவாகவே இருந்திருக்கும் என்பது தெரிய வரும். அன்பு இல்லாதவர்களாகவும் மற்றவர்களிடம் நம்பிக்கையில்லாமலும் வெறுப்பு கொண்டு ஒதுங்கி வாழ்ந்திருப்பர். எதிலும் உண்மையான ஈடுபாடு கொள்ளாமல். பட்டும் படாமல் இருந்திருப்பர்.

எதற்கெடுத்தாலும் வாக்குவாதம் செய்யும் குணமும் அகம்பாவமும், எதிர்ப்பு மனப்பான்மை அலட்சியம், மற்றவர் மனம் புண்படும்படிப் பேசுதல், நடத்தல் முதலிய குண இயல்புகளும் இவர்களிடம் நிறைந்து காணப்படும். இந்நோய்க்கு ஆளானவர்கள் பெரும்பாலும் திருமணமான வர்களாகவே இருப்பார்கள். ஏதாவது ஒரு வேலையிலும் இருப்பர். எனவே இவர்களுடைய பண்பிய தொகுப்பு குமரப் பருவம் சார்ந்த மனச்சிதைவு நோயாளிகளைக் காட்டிலும் அதிகமாகவே வளர்ச்சி பெற்றிருக்கும்.

தன்னைப் பிறர் துன்புறுத்துவதாகத் தவறாக நம்புவதே இந் நோயின் மிக முக்கியமான அறிகுறியாகும். இது தவிர தன்னைப் பற்றி மிகப் பெருமையாக கொள்ளுதலும் தன் நிராசை-களைக் கற்பனையால் நிறைவேற்றிக்




**இந் நோய் ஏற்பட்டுள்ள ஒருவர் எதிலும் உண்மையான ஈடுபாடு கொள்ளாமல். பட்டும் படாமல் இருந்திருப்பர். சிலருக்கு இந்நோய் உள்ளதா என்பதை அறிந்துகொள்வதும் கடினம்...**

விஷயங்களில் அவர்களுடைய கூரிய அறிவுத்திறன் மங்காமலிருக்கும்.

இத்தகையோருக்கு முறையானமரு-த்துவம் அளிக்கப்படாவிட்டால் அவர்களின் பண்பியல் தொகுப்பு சீர்குலைந்துவிடும். இதனால் சந்தேக எண்ணங்கள் மிக வலிமை பெற்று அதற்கேற்றாற் போல் உணர்ச்சிகளும் மாறுபடுகின்றன. பேச்சிலும் அர்த்தமற்ற புது வார்த்தைகள் கலந்து வர ஆரம்பிக்கின்றன.

நோய் தோன்றிய ஆரம்ப காலத்திலேயே சிகிச்சை அளிப்பதுதான் மிகச்சிறந்தது. ஆனால் துரதிருஷ்டவசமாக இது பெரும்பாலும் நடப்பதில்லை. நோயாளி தானாகவே மனநல மருத்துவரை அணுகுவது என்பது மிக அரிது.

சமீபத்திய கணக்கெடுப்புப்படி இத்தகைய நிலை வருடாவருடம் கூடிக்கொண்டு தான் செல்கிறது. ஆதலால் நோய் தோன்றிய உடனே மன நல மருத்துவரை அணுகி முளையிலேயே கிள்ளி எறிந்து விடுவது மிகவும் நல்லது.

## எடையைக் குறைத்தார் ஐஸ்...



ஐஸ்வர்யா ராய் மறுபடியும் தனது சிக் அழகைப் பிடித்து விட்டார். ஒரு நகைக் கடை விளம்பரத்திற்காக அவர் கொடுத்துள்ள போஸ் வெளியாகியுள்ளது. குழந்தை பெற்ற பிறகு குண்டாக காணப்பட்ட ஐஸ்வர்யா. இதில் முன்பை விட பொலிவாக. படு அழகாக கம்பீரமாக காணப்படுகிறார்.

ஐஸ்வர்யாவுக்கு சில மாதங்களுக்கு முன்புதான் அழகான பெண் குழந்தை பிறந்தது. அதன் பின்னர் வழக்கமாக எல்லாப் பெண்களுக்கும் ஏற்படும் உடல் மாற்றங்கள் ஐஸ்வர்யாவுக்கும் நிகழ்ந்தன. கிட்டத்தட்ட 90 கிலோவரை எடை அதிகரித்த ஐஸ் ஐ சிலபேர் 90 கே.ஜி. தாஜ்ஹால் என்றெல்லாம் நய்யாண்டி செய்த பலரும் வாயை மூடும் அளவுக்கு தற்போது படு அழகாக மாறியுள்ளார்.

## விஜய்யின் துப்பாக்கியை வாங்கியது விஜய் டி.வி



விஜய் நடித்து வரும் துப்பாக்கி படத்தின் தொலைக்காட்சி உரிமையை விஜய் டி.வி பெரும் விலைகொடுத்து வாங்கியுள்ளது.

துப்பாக்கி படத்தை ஏ.ஆர்.முருகதாஸ் இயக்க விஜய்க்கு ஜோடியாக காஜல் அகர்வால் நடிக்கின்றார். இப்படத்திற்கான தொலைக்காட்சி உரிமையை பெரும் விலை கொடுத்து விஜய் டி.வி வாங்கியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

தற்போது பெரிய செலவில். முன்னணி நடிகர்களின் படங்களை ஜெயா டி.வி.யும் விஜய் டி.வி.யும் வாங்கி வருகின்றன. ஏற்கனவே கோச்சடையான். மாற்றான். விஸ்வரூபம் போன்றை ஜெயா டி.வி. வாங்க துப்பாக்கி படத்திற்கான தொலைக்காட்சி உரிமையை விஜய் டி.வி வாங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## சசியை மகிழ்வித்தார் பாலா...



சசிக்குமார் நடிக்கும் சுந்தரபாண்டியன் படப்பிடிப்பு தளத்திற்கு திடீரென வருகை தந்து மிகுந்த பரபரப்பை ஏற்படுத்திவிட்டார் பாலா. பிரபலமாக பேசப்படும் இயக்குநர்கள் பட்டியலில் பாலா மிகவும் குறிப்பிடத்தக்கவர். தற்போது சசிக்குமார் நடிக்கும் சுந்தரக்காண்டம் திரைப்படத்தின் படப்பிடிப்பு நடைபெற்றுக்கொண்டிருக்கும் இடத்திற்கு. இயக்குநர் பாலா திடீரென பார்வையிட்டு இன்ப அதிர்ச்சி கொடுத்துள்ளார்.

இது பற்றி பாலா கூறுகையில், எனக்கு சசிக்குமாரை மிகவும் பிடிக்கும். நல்ல திறமைசாலி. கடின உழைப்பாளர். சமூக பிரச்சினையை மக்களிடம் கொண்டு சேர்க்கும் ஒரு சமூக பொறுப்பாளர். இதனால் சசிக்குமார் படப்பிடிப்பில் பணியாற்றுவதை நேரில் பார்க்க ஆசைப்பட்டேன்.

அதனால் இவ்வாறு திடீரென வந்து இன்ப அதிர்ச்சி கொடுத்ததாக தெரிவித்துள்ளார்.

## முடியும் தருவாயில் மணிரத்தினத்தின் கடல்

இயக்குனர் மணிரத்னம். தன்னுடைய கடல் படத்தின் பெரும்பாலான காட்சிகளை படமாக்கி முடித்து விட்டார். இன்னும் சில காட்சிகள் மட்டுமே மீதமுள்ள நிலையில் விரைவில் "கடல்" திரைக்கு வந்துவிடும். ஏ.ஆர்.ரஹ்மான் இப்படத்திற்காக நான்கு பாடல்களை முடித்து கொடுத்து விட்டார். கேரளாவில் படப்பிடிப்பு நடைபெற்றது. அங்கு நாயகன் கௌதம் கார்த்திக். நாயகி துளசி பங்கேற்ற ஒரு அழகான காதல் பாடலை படமாக்கினார்கள். மேலும் அந்தமான். கேரளா பகுதிகளிலே மிக அதிகமாக படப்பிடிப்பு நடத்தியிருக்கிறார்கள். தமிழ்நாட்டை சுற்றியுள்ள கடலோர பகுதிகளில் தற்போது படப்பிடிப்பை நடத்தி வருகிறார்கள். 75 வீதமான படப்பிடிப்பு முடிந்த நிலையில் "கடல்" விரைவில் திரைக்கு வரும்?.



## காதலரையே மணந்தார் எங்கேயும் எப்போதும் அனன்யா



நடிகை அனன்யா. தன் காதலன் ஆஞ்சநேயனை திருமணம் செய்து கொண்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த தகவலை நடிகை ஆஞ்சநேயனின் தந்தை கோபாலா கிருஷ்ணனே தெரிவித்துள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

தமிழில் நாடோடிகள். சீடன். எங்கேயும் எப்போதும் படங்களில் நடித்த அனன்யாவுக்கும் கேரளா தொழில-திபர் ஆஞ்சநேயனுக்கும் கடந்த பெப்ரவரி மாதம் நிச்சயதார்த்தம் நடந்தது. இதன்பின்பு. ஆஞ்சநேயனுக்கு ஏற்கனவே திருமணமாகி விட்டதாக அனன்யாவின் பெற்றோருக்கு தெரிய வந்தது. உடனே நிச்சயதார்த்தத்தை இரத்து செய்து விட்டு அனன்யாவை வீட்டில் அடைத்தனர். இந்நிலையில் நடிகை அனன்யா வீட்டை விட்டு வெளியேறி ஆஞ்சநேயனை திருமணம் செய்து கொண்டதாகவும் இருவரும் தனிக்குடித்தனம் நடத்துவதாகவும் தந்தை கோபால கிருஷ்ணன் தெரிவித்திருக்கிறார். இது குறித்து அனன்யாவின் தத்தையார் கூறியதாவது. என் மகள் எங்களுக்கு துரோகம் செய்து விட்டாள். அவளும் ஆஞ்சநேயனும் திருப்பதியில் திருமணம் செய்து கொண்டதாக எங்களுக்கு தகவல் கிடைத்தது என்றார்.



நல்லூர் பிரதேச சபை கொக்குவில் உப அலுவலகத்தில் கடந்த திங்கட்கிழமை நடத்திய மனைப் பொருளியல் கண்காட்சியில் கலந்துகொண்ட விருந்தினர்கள், பார்வையாளர்கள் அமர்ந்திருப்பதையும் கண்காட்சியை உள்ளூராட்சித் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.சுஜீகலா தவிசாளர் ப.வசந்தகுமார் ஆகியோர் பார்வையிடுவதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள் : நெடுந்தீவு நிருபர்)

# சைக்கிள்களை திருடி விற்பனை செய்த திருடன் பொலிஸாரிடம் மாட்டினான்

யாழ்ப்பாணம்,

பல சைக்கிள்களைத் திருடி விற்று அப்பணத்தில் சல்லாபமாகச் சுற்றித்திரிந்த இளம் வாலிபர் ஒருவர் பொலிஸார் விரித்த வலையில் அகப்பட்டுக்கொண்டார்.

இவரைக் கைது செய்த பொலிஸார் திருடப்பட்ட ஐந்து சைக்கிள்களைக் கைப்பற்றியதுடன் இச் சைக்கிள்களை விற்பதற்கு உதவி புரிந்த வாலிபரையும் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.சைக்கிள் திருட்டுக்கள் குறித்து மானிப்பாய் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்து இன்ஸ்பெக்டர் சந்தன தலைமையில் சென்ற கான்ஸ்டபிள்கள் ஹரிச்சந்திர, வசீகரன் ஆகியோர் சந்தேகத்தின் பேரில் ஒரு வாலிபரைக் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தியபோது கடந்த காலங்களில் இடம்பெற்ற சைக்கிள் திருட்டுக்களும் அம்பலத்திற்கு வந்தன.

பல இடங்களில் விற்பனை செய்யப்பட்ட நிலையிலிருந்த ஐந்து சைக்கிள்களைக் கைப்பற்றிய பொலிஸார் திருடப்பட்ட சைக்கிள்களை விற்பனை செய்வதற்கு உதவி புரிந்த வாலிபரொருவரையும் கைதுசெய்தனர். இருவரும் தொடர்ந்து விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

# பெண்களுக்கெதிரான வன்முறைகளை தடுக்க சீரழிவுகள் வரமுன்னர் நடவடிக்கை தேவை

## யாழ். அரச அதிபரிடம் கோருகின்றார் வலி.மேற்கு பிரதேச சபை தவிசாளர்

யாழ்ப்பாணம்,

குடாநாட்டில் கடந்த காலங்களில் பெண்கள் மீது பல வடிவங்களில் இடம்பெறும் வன்முறைச் சம்பவங்கள் பெண் சமூகத்தை ஒடுக்குவதற்கு ஒப்பான செயலாகும். மேற்படி விடயம் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதென்பது வெறும் கண்துடைப்புச் செயல் போன்றது. எனவே இது போன்ற சீரழிவுகள் வருமுன் காப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு வலிகாமம் மேற்கு பிரதேச சபை தவிசாளர் திருமதி நா.ஐங்கரன் யாழ். அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

குடாநாட்டில் அண்மைக்காலமாக சிறுவர்கள், பெண்கள் மீது இடம்பெற்றுவரும் துஷ்பிரயோகங்கள் குறித்தும் அவற்றை தடுப்பதற்கான வழிமுறைகள் குறித்தும் வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவித்திருப்பதாவது;

கடந்த 26.7.2012 அன்று தெல்லிப்பழை பிரதேசத்தில் மனநிலை குன்றிய சிறுமியை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி கொடூரத்தனமாக கொலை செய்ய முயற்சித்ததாகப் பத்திரிகைகளில் வெளியாகி இருந்தமையைத் தாங்கள்அறிந்திருப்பீர்கள் மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக கடந்த காலங்களில் சில சம்பவங்கள் யாழ்.மாவட்டத்தில் இடம்பெற்றுள்ளன.

இதுபோன்ற சம்பவங்கள் அருவருக்கத்தக்கதாக அமைவது மட்டுமன்றி எமது உயரிய கலாசாரத்தையும் பண்பாட்டையும் சீரழிப்பதற்கு சமனானதாகவே அமைந்துள்ளது. மேற்படி சம்பவங்கள் தொடர்பில் வன்முறையாளர்களுக்கு எதிராக மிகக் கடுமையான தண்டனை வழங்கப்படும் அதேவேளை அத்தண்டனைகளையும் பத்திரிகை மற்றும் ஊடகங்கள் வாயிலாக உரிய முறையில் மக்களுக்குச் சென்றடையக்கூடிய பொறிமுறை ஒன்றை உருவாக்குவது பொருத்தமுடையது. இவற்றிற்கு மேலாக தங்களின் கீழ் பணியாற்றும் சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தர்கள் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் மூலம் இவ்வாறான துன்புறுத்தலுக்கு உள்ளாகக்கூடிய சிறுவர்கள் கண்டறியப்பட்டு அவர்களுக்குரிய பாதுகாப்பு ஒழுங்குகள் மேற்கொள்வது ஆரோக்கியமான சமூகத்திற்கு உறுதுணையான ஒன்று என நான் கருதுகின்றேன். இது மட்டும் அல்லாமல் மாவட்ட ரீதியாகச் செயற்படுகின்ற பெண்ணியம் சார்ந்த அமைப்புக்கள் மேற்படி விடயங்கள் தொடர்பில் உரிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய செயற்பாட்டையும் தாங்களே ஊக்குவிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன்.

கடந்த காலங்களில் பெண்கள் மீதான வன்முறை பல வடிவங்களில் ஏற்படுத்தப்பட்டது. இது பெண் சமூகத்தை ஒடுக்குவதற்கு ஒப்பான ஒரு செயலாகவே நான் கருதுகின்றேன். மேற்படி விடயம் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பது என்பது வெறும் கண்துடைப்பு செயல் போன்றது. இதற்கு மேலாக வருமுன் காப்போம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உச்சியோடை விவசாயக்குளங்களை புனரமைக்குமாறு வேண்டுகோள்

மானிப்பாய்,

மானிப்பாய் உச்சியோடையில் உள்ள விவசாயக் குளங்களைப் புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். இப்பகுதியின் விவசாய கிணறுகள் நீண்ட காலமாகப் புனரமைப்புச் செய்யப்படாமல் தூர்ந்து போகும் நிலை காணப்படுகின்றன. அத்துடன் மழைநேரங்களில் இக்கிணறுகள் நீரில் மூழ்கியும் விடுகின்றன. இதனால் உயிர் ஆபத்துக்களும் ஏற்படும் வாய்ப்புகள் அதிகம் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கோடைகாலங்களில் அப்பகுதியில் உள்ள கேளன் காமக்குளத்தில் நீர் வற்றி வனாந்தரமாகக் காணப்படுகிறது. இக்காலத்தில் இக்கிணறுகள் மூலமே தமக்கான விவசாய நீர் பெறப்படுவதாகவும் இந்த நீர் கிடைக்காவிடின் தாம் விவசாயத்தினை விட்டு சோற்றிற்குப் பிச்சைதான் எடுக்கவேண்டும் என அப்பகுதி மக்கள் தமது ஆதங்கங்களை வெளிப்படுத்துகின்றனர். எனவே, சம்பந்தப்பட்டவர்கள் தலையீடு செய்து உரியவர்களின் விவசாய நடவடிக்கைகளைப் பாதுகாக்குமாறு வேண்டப்படுகின்றது.

## நல்லூரில் காட்சிக்கூடம்

இலங்கை தேசிய பார்வையற்றோர் சம்மேளன வடமாகாணக்கிளை பார்வையற்றவர்களின் திறன் விருத்தியை வெளிப்படுத்தும் காட்சிக்கூடமொன்றினை நல்லூர் மஹோற்சவ காலத்தில் பக்தர்கள் பார்வைக்காக அமைத்துள்ளது. இக்காட்சிக் கூடமானது நல்லூர் கோயிலுக்கு முன்பாக பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ளது. பெருந்திரளான பக்தர்கள் இக் காட்சிக் கூடத்திற்கு விஜயம் செய்து பார்

# போதையில் மோட்டார் சைக்கிள் ஓட்டியவருக்கு இருபதாயிரத்து ஐந்நூறு ரூபா குற்றப்பணம்

யாழ்ப்பாணம்,

மதுபோதையில் மோட்டார் சைக்கிளை செலுத்திய வாலிபர் ஒருவர் குற்றத்தை ஒப்புக்கொண்டதை தொடர்ந்து 20 ஆயிரத்து 500 ரூபாவை அபராதமாகச் செலுத்தினார். ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மானிப்பாய் பொலிஸார் மோட்டார் சைக்கிளில் வந்த வாலிபரொருவரை ஆனைக்கோட்டையில் மறித்துச் சோதனை செய்தபோது அவர் மதுபோதையில் இருப்பதை அறிந்தனர்.

இவரை வைத்தியப் பரிசோதனைக்கு உட்படுத்திய பொலிஸார் இவர் மீது மது போதையுடன் மோட்டார் சைக்கிளைச் செலுத்தியமை உட்பட எட்டுக் குற்றச்சாட்டுக்களை சுமத்தி இவர் மீது மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தனர்.

இவ்வழக்கு மல்லாகம் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது வாலிபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து நீதிவான் இவருக்கு ரூபா 20 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

# நயினாதீவில் வரட்சி கால்நடைகள் இறப்பு

(நெடுந்தீவு நிருபர்)

நயினாதீவில் கடும் வரட்சி காரணமாகக் குளங்கள் அனைத்தும் நீரின்றி உவர்மண் தரையாகக் காட்சியளிக்கின்றன.

இதனால் கால்நடைகள் தமக்குத் தேவையான குடிதண்ணீர் கிடைக்காமல் அலைந்து திரிந்து இறப்பதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இறக்கும் கால்நடைகளை அதன் உரிமையாளர்கள் புதைக்க முன்வருவதில்லை எனவும் அதனால் நயினாதீவு உப அலுவலகமே அந்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# எயிட் தன்னார்வ தொண்டு நிறுவனத்தினரால் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

தெல்லிப்பழை,

யாழ்.எயிட் தன்னார்வ தொண்டு நிறுவனத்தினரால் மிருசுவில் கெற்போலி அ.த.க.பாடசாலையில் கல்வியினை மேற்கொள்ளும் நலிவுற்ற மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பாடசாலை அதிபர் பி. நடேசலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஈழத் தமிழர் கழக சிட்னி கிளை ஆதரவுடன் நலிவுற்ற மாணவர்களுக்கு கற்றல் மேம்பாட்டிற்கான பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்விற்கு விருந்தினர்களாக சமூக சேவையாளரும் லண்டன் வாழ் புலம்பெயர் தமிழருமான உமாசுதன் விஜயநந்தினி தம்பதிகள் மற்றும் இ.செல்வலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழ ங்கி வைத்தனர்.

மேலும் கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் கல்வி கற்கும் நலிவுற்ற மாணவர்களுக்கு வழங்கவென ஒருதொகுதி கற்றலுக்கான உதவிப்பொருட்கள் பாடசாலை அதிபர்களிடம் வழங்கப்பட்டன. திருகோணமலை சம்பூரில் இருந்து இடம்பெயர்ந்து மூதூர் சேனையூரில் இயங்கும் சம்பூர் மகா வித்தியாலயம் மற்றும் மட்டக்களப்பு ஆனைப்பந்தி விவேகானந்தா வித்தியாலயம் ஆகியவற்றிற்கு கற்றல் மேம்பாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.



பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தாவினுடைய ஏற்பாட்டில் கனடா, இங்கிலாந்து நாடுகளில் வாழும் மக்களின் உதவியுடன் பளை மத்திய கல்லூரியில் தரம் 5 இல் கல்வி கற்கும் பெற்றோரை இழந்த மாணவி ஆர்.ஸ்ரீஅபிலாசினி, போரினால் தந்தையைத் தவறவிட்ட ஆர்.துசி ஆகியோருக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்குவதையும் அருகில் கல்லூரி அதிபர் கே.குணபால சிங்கம் நிற்பதையும் படங்களில் காணலாம்.

# தியான மண்டபம் அமைக்க நன்கொடைகள் பெறப்படுகின்றன

(செட்டிகுளம் நிருபர்)

திருப்பழனி ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் தொடர்ந்து பதினாறு நாட்கள் நடைபெற்று தீர்த்த உற்சவத்துடன் நிறைவு பெற்றுள்ளது. இவ் உற்சவம் சிறப்பாக அமைவதற்கு உதவிய வர்த்தக பெருந்தகைகளுக்கும் உபயகாரர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதாக ஆலயபரிபாலன சபையினர் தெரிவித்துக் கொள்கின்றனர்.

இவ்வருட திருவிழாவில் கலாசார தியான மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டதுடன் இதற்கான ஆலோசனைகளை அரச அதிபர், பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச செயலாளர், கலாசார உத்தியோகத்தர், அரசியல் பிரமுகர்கள் மற்றும் சைவப்பெருந்தகைகள் ஆகியோர் வழங்கியுள்ளனர்.

எனவே, இத்தியான மண்டபம் அமைப்பதற்கு பொருளாதார, பண உதவிகளையும் உள்நாடு, வெளிநாடுகளின் பெருந்தகைகளிடம் ஆலய பரிபாலனசபையினர் எதிர்பார்ப்பதாகவும் பரிபாலன சபையின் தலைவர் அ.மாதவன் கோரி நிற்கின்றார்.

தங்களாலான உதவிகளை செய்ய முன்வருவோர் பின்வரும் வங்கிக் கணக்கில் வைப்பிலிடுமாறு கேட்டுள்ளனர். திருப் பழனி முருகன் ஆலயம் இலங்கை வங்கி வவுனியா கிளை 73178219 இற்கும், 040200181609690 மக்கள் வங்கி வவுனியா கிளை சேமிப்பு கணக்கில் வைப்பில் இடலாம்.

மேலதிக விபரங்களுக்கு 0247900553 என்ற ஆலயத் தொலைபேசி இலக்கத்துடனோ அல்லது தலைவர், செயலாளர் ஆகியோருடனோ தொடர்பு கொள்ளலாம் என ஆலய பரிபாலன சபையினர் கேட்டுக் கொள்கின்றனர்.

# தென்மராட்சி கல்வி வலயத்தில் மூன்று பாடசாலைகள் அபிவிருத்தி

தென்மராட்சி வலயத்திற்குட்பட்ட மூன்று பாடசாலைகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

5000 ஆரம்ப பாடசாலைகளையும் 1000 இடைநிலைப் பாடசாலைகளையும் புனரமைக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட மட்டுவில் அ.த.க.பாடசாலை, கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலயம், மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளே புனரமைக்கப்படவுள்ளன.

இப்புனரமைப்பு வேலைகளுக்கான ஆரம்ப நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை மட்டுவில் அ.த.க.பாடசாலையில் நடைபெற்றது.

# வல்லிபுர ஆழ்வார் சுற்றாடலிலுள்ள கடையும் ஆலய உண்டியலும் உடைத்து திருட்டு

வடமராட்சி,

வல்லிபுரக் கோவிலின் சுற்றாடலில் உள்ள கடையிலும் வெளி வீதியில் உள்ள ஆலய உண்டியலிலும் பூட்டு உடைக்கப்பட்டுத் திருடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. ஆலயச் சுற்றாடலில் உள்ள கடையின் வெளிப்பூட்டு இனந்தெரியாதவர்களால் உடைக்கப்பட்டு அங்கிருந்த ஒருதொகுதி கிட் காட், சோடா, பிஸ்கட், சிகரெட் போன்ற 15 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

அன்றைய தினமே வல்லிபுரக்கோயிலின் அண்மையில் உள்ள குருக்கட்டுக் கோயில் உண்டியலை உடைக்க முற்பட்டபோது அங்கு கடமையில் இருந்த ஆலயக் காவலர்கள் கூச்சலிட்டுச் சத்தம்போட திருடர்கள் உண்டியல் உடைப்பதை விட்டு தப்பிச்சென்றுள்ளனர். ஆனால் வல்லிபுர ஆலயத்தில் உள்ள உண்டியலை உடைத்து அதற்குள் இருந்த பணத்தி னைத் திருடிச்சென்றுள்ளளனர்.

இச்சம்பவம் பற்றி பருத்தித்துறைப் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டதைத்தொடர்ந்து பருத்தித்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தமிழர் பண்பாட்டில் முதுமைப் பருவம் ஒரு வாழ்வியல் அனுபவத்தின் குறியீடு

(தொடர்ச்சி...)

முதுமைப் பருவம்-

யாழ்ப்பாணத் தமிழர் பண்பாட்டில் முதுமைப்பருவம் ஒரு வாழ்வியல் அனுபவத்தின் குறியீடாகக் கருதப்பட்டது. இப்பருவம் இரு கட்டங்களைக் கொண்டு அமைந்திருந்தது. மனித வாழ்வியலில் ஒரு சுற்றுவட்டமாக 60 ஆண்டுகள் கணக்கிடப்பட்டிருந்தன. பண்டைத் தமிழரது சோதிடக்கணிப்பிலும் 60 ஆண்டுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்வாண்டுக் கணிப்பில் 30 வயது தொடக்கம் 50 வயது வரையான 20 ஆண்டுகள் குடும்பப் பொறுப்புக்களை ஏற்று வாழும் ஒரு முதிர்ந்த பருவமாகக் கருதப்பட்டது. உடல் உழைப்பும் இக்காலத்தில் ஆற்றலுடையதாக இருந்தது.

திருமணம் முடித்து குழந்தைகளைப் பெற்று அவர்களை வளர்த்து மனிதர்களாக உருவாக்கும் காலமாகவும் இக்காலப்பகுதியே விளங்கியது. 'முதுமை' என்ற சொல் வயதின் மூப்பைக் குறிக்கும் சொல்லாகும். தற்காலத்தில் 'கிழடு' என்ற சொல்லும் பயன்பாட்டில் உள்ளது. 'கிழட்டுப்பருவம்' என்ற தொடரின் பயன்பாடு பேச்சுவழக்கில் பரவலாக உள்ளது. 'கிழடு' என்ற சொல் 'உரிமை' என்ற பொருளிலேயே பண்டைத் தமிழ் இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அவ்விலக்கியங்களில் 'நாடு கிழவோன்' என்ற தொடர் நாட்டிற்கு உரிமையுடையவன் எனப் பொருள் தந்து நிற்கிறது. காதலனையும் கிழவன் என்ற சொல் இத்தன்மையில் குறித்து நின்றது. எனவே முதியோர் என்ற சொல்லே முதுமைப் பருவமடைந்தோரைக் குறிக்கும் சொல்லாகவுள்ளது.

இப்பருவம் குடும்பப் பொறுப்புக்களைச் சுமக்கும் பருவமாக அமைந்திருப்பதால் முயற்சிகள் மேற்கொள்ளும் காலகட்டமாக இருந்தது. '40 வயது வரை நாயோட்டம்' என்ற பழமொழி வழக்கு. இதனை நன்குணர்த்தும் குழந்தை வளர்ப்பு, உறவுகள் கடமை எனப் பல செயற்பாடுகளைச் செய்யும் காலமாகும். இளமை உணர்வுகள் கட்டுப்பட்டு அடுத்த தலைமுறையை உருவாக்கும் பணியை மேற்கொண்டு வாழும் காலமாகையால் ஓர் ஒழுங்கு பேணப்பட்டது. யாழ்ப்பாணத்தில் மேலைத்தேச செல்வாக்கு பரவுவதற்கு முன்னர் உரிய தொழில்களைப் பயிற்றல், மேற்பார்வை செய்தல் என்னும் இரு செயற்பாடுகள் முதுமையின் முக்கிய கடமைகளாக இருந்தன. எனவே தந்தை மகனுக்கு ஒரு ஆசிரிய நிலையிலிருந்து பயிற்சியளிப்பது வாழ்வியலாக இருந்தது. அதேபோலத் தாய் மகளுக்கு வீட்டு நிர்வாகத்தையும் குழந்தை வளர்ப்பையும் மகளுக்குப் பயிற்றினாள். இப்பயிற்சி ஒரு தலைமுறைக் கையளிப்பாக நடைபெற்றது.

ஆனால், மேலைத் தேசத்தவர் வருகையாலும் கல்வி பயிற்சியாலும் இந்நடைமுறையில் மாற்றம் ஏற்பட்டது. ஏட்டுக் கல்வி மாறி பாடசாலைக் கல்வி புகுத்தப்பட்டபோது இளமைக்கும் முதுமைக்கும் இடையிலிருந்த தொடர்பு குறைவடையலாயிற்று. பண்பாட்டு நிலையில் புதிய செயற்பாடுகள் தோன்றின. குறிப்பாக ஆடை அணிவதில் முதுமைத் தேசியத்தையும் இளமை விதேசியத்தையும் அடையாளப்படுத்தி நின்றது. பண்டைய தமிழர் தோற்றப்பாட்டில் ஆண்களும் குடுமி வைத்திருந்தனர். ஆனால் மேலைத்தய நாகரிகம் உட் புகுந்த போது குடுமி களையப்பட்டது. பெண்கள் மட்டுமே குடுமி வைத்திருந்தனர். இளைஞர் குடுமியில்லாமல் இருக்க முதிய ஆண்கள் மட்டுமே குடுமியோடிருந்தனர். எனவே அக்காலகட்டத்தில் குடுமி ஆண்களுக்கு முதுமையின் அடையாளமாகவும் கருதப்பட்டது. முதியோர் வேட்டி அணிய இளையோர் காற்சட்டை அணிந்தனர். பெண்களைப் பொறுத்தவரையில் இவ்வாடை மாற்றம் உடனடியாக நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இன்னும் நரை, திரை, மூப்பு என்ற மாற்றங்கள் முதுமைப் பருவத்தின் வளர்ச்சி நிலையைக் காட்டி நின்றன. நாற்பதில் நரை வரும் என்ற தொடரின் பயன்பாடு இதனை நன்கு விளக்கி நிற்கிறது. தொடக்கத்தில் நரை காதோரத்தில் தோன்றும். ஐம்பது வயதாகும் போது கண்ணில் திரை விழும். பார்வை குறைவுபடும். கண்ணாடி அணிய வேண்டிவரும். அறுபது வயதாகும்போது உடலில் தளர்ச்சி ஏற்படும். நடை தடுமாறும். எனவே கைத்தடியோடு நடக்க வேண்டிவரும். பிறருடைய உதவியால் நடமாட வேண்டிய நிலை ஏற்படும். ஆனால் வாழ்க்கையில் பெற்ற அனுபவங்களால் அறிவியல் ஒரு தெளிவு இருக்கும். சொல்லில் ஒரு தெய்வீகம் தோன்றும். 'மூத்தோர் வார்த்தை அமுதம்' என்னும் தொடர் இதனை நன்கு விளக்கி நிற்கிறது.



முதியோர் வாக்குப் பலிக்கும் என்ற அசையாத நம்பிக்கையும் ஏற்பட்டிருந்தது. ஒரு நல்ல காரியத்தைத் தொடங்கும் போது முதியவர்களே தொடக்கி வைக்கவேண்டும் என்ற வரையறையும் இருந்தது. புதிய வீடு கட்டிக் குடிபுகும்போது ஒரு முதிய தம்பதியரை வீட்டினுள்ளே சிறிது நேரம் தங்கச் செய்யும் நடைமுறையிருந்துள்ளது. அதிலும் பேரப்பிள்ளை பூட்டப்பிள்ளையுடைய தம்பதியினரே தெரிவு செய்யப்படுவர். 60 வயதிற்குள் நான்காவது தலைமுறையோடு ஒரே வீட்டில் வாழும் தம்பதியரும் அக்காலத்தில் இருந்தனர். எனவே வீடு என்பது பல தலைமுறையினர் மகிழ்வாக வாழும் இடமென்ற கருத்தே அக்காலத்தில் வலியுற்றிருந்தது. முதுமைப்பருவம் வரை ஒழுங்கான வாழ்வியலை மேற்கொண்டவர்கள் சமூகத்தில்பெருமதிப்புப் பெற்றிருந்தனர்.

திருமணத்திலும் முதிய தம்பதியினரே முதலில் மணமக்களை வாழ்த்துவர். பண்பாட்டு ஆடையணிந்து முதிய கணவனும் மனைவியும் அறுகரிசி போட்டு மணமக்களை வாழ்த்தும்போது மணமக்கள் மனதிலும் இல்லற வாழ்வியல் பற்றிய நம்பிக்கை ஏற்படும். எனவே நரையும் திரையும் முதுமையின் அடையாளங்களாக இருந்தாலும் வாழ்வியல் நடைமுறைகளில் பெரிதும் மதிக்கப்பட்டன.

வழிபாட்டு நடைமுறைகளிலும் முதுமையின் பங்களிப்புப் பெரிதும் வேண்டப்பட்டது. பருவகால விளைபொருள் பற்றிய அறிவுடையோராக முதியவர்கள் கருதப்பட்டனர். யாழ்ப்பாணத்தில் மா, பலா, வாழை என்னும் முக்கனி மரங்கள் நாட்டும் செயற்பாட்டில் முதியோர் பெரிதும் அக்கறை காட்டினர். இம் மரங்களை நடும்போது பலனைத் தமது பேரப்பிள்ளைகள் அனுபவிக்கவேண்டும் என்றே விரும்பினர். சோதிடம், கைவைத்தியம் என்பவற்றிலும் முதியோர் ஆற்றல் பெற்றிருந்தனர்.



ஆனால் இன்று இம் முதுமைப் பருவம் இரு கோணங்களாகி விட்டது. ஒருபுறம் முதுமைப்பருவத்தை மறைக்கும் முயற்சிகள் நடைபெறுகின்றன. நரைமயிரைக் கரு நிறமாக்க பல முதியோர் கறுப்பு வண்ணம் பூசுகின்றனர். 70 வயதை 40 வயதாக்கப் பெருமுயற்சி செய்கின்றனர். ஆண், பெண் வேறுபாடு இன்றி முதியவர் தம்மை இளையவராகச் செய்யும் முயற்சி உலகம் முழுவதுமே பரந்துள்ளது. சர்வதேச நிலையில் வயது மூப்பை யாரும் விரும்பாத நிலையே உள்ளது. இயற்கையான வயதிற்கான தோற்றத்தை வர்ணப்பூச்சால் மாற்றி விடலம் என்ற நினைப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் இளையோரும் இத்தகைய முதியோர் மீது சினம் கொள்கின்றனர். முதியோரது இளமையான தோற்றப் பொலிவு தொழில் செய்யுமிடங்களில் அவர்களுடைய பதவிக் காலத்தை நீடிக்கச் செய்கிறது. அதனால் இளையோரது வேலைவாய்ப்புக்கள் குறைவடைகின்றன.

அடுத்த சிக்கல் முதியவரிடையே இன்று நிலவுகின்ற ஒழுக்கப்பிறழ்வாகும். வயோதிபப் பருவத்திலும் புலனடக்கமின்றி மனதைக் காம வயப்படுத்தி நிற்பதால் பாலியல் துஷ்பிரயோகம் நடைபெறக் காரணமாகி முதியோர் நிற்கின்றனர். குடும்பத்தலைவன் என்ற தகுதிப்பாடும் பொருட்பேறும் இதற்கு உதவியாக உள்ளன. இத்தகைய ஒழுக்கப் பிறழ்வு நிலச் சொந்தக்காரரான வேளாளரிடம் இருந்ததென யாழ்ப்பாணப் பண்பாட்டைப் பதிவுசெய்துள்ள ஈழத்து நாவலாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். போவல் திருவிழாக்களிலே ஆடல், பாடல் நிவேதனம் செய்ய வந்த தென்னகத்துத் தேவரடியார்களை தமது காமத்திற்குப் பயன்படுத்தும் நிலைக்கு முதியோர் ஒழுக்கச் சீர்கேடு நடைபெற்றுள்ளதை அறியமுடிகிறது. அதனால் வழிபாட்டு நடைமுறையில் ஆடல், பாடல்,நிவேதனம் நிறுத்தப்படவேண்டியதாயிற்று. முதியோர் ஒழுக்கப் பிறழ்வு, இளையோரிடம் தொற்றிக் கொள்ளலாயிற்று. நரையின்றி வாழ ஆசைப்படும் முமதுமையை இளமை மதிக்க விரும்பவில்லை. முதுமையின் வழிநடத்தலை இளமை ஏற்கவும் மறுக்கிறது. அரச பணிகளில் இருக்கும் முதியோர் தமது கோலத்தை மாற்றிப் பணி நீட்டம் பெறுவதால் இளையோர் அரச பணிகளுக்காகக் காத்திருக்க நேர்ந்துள்ளது. இவ்விடயம் முதியோர் தம் மனோநிலையை மாற்றிக் கொள்ள மறுக்கும் நிலையும் இன்று காணப்படுகின்றது.

மேலும் முதியோருக்கு இன்னொரு இழிநிலையும் இன்று ஏற்பட்டுள்ளது. நாட்டு நிலை காரணமாகப் புலம்பெயர்ந்து சென்றவர்களுடைய முதிய பெற்றோர் யாழ்ப்பாணத்தில் முதியோர் பராமரிப்பு நிலையங்களிலே துயர் சுமந்து வாழ்கின்றனர். அவர்களுடைய பிள்ளைகளும் பெற்றோரைத் தம்முடன் வைத்திருக்க முடியாமல் திண்டாடுகின்றனர். தாங்கமுடியாத குளிர் காரணமாகவும் சூழல் வேறுபாடு காரணமாகவும் முதியோர் தமது பிள்ளைகளுடன் சென்று வாழமுடியாதுள்ளது. அதனால் யாழ்ப்பாணத்திலுள்ள வயோதிபர் இல்லங்களிலே தங்க வைத்துள்ளனர். இவ்விடுதி வாழ்வு வேறுபட்டதொரு பண்பாட்டு நிலையையும் உருவாக்கியுள்ளது. குடும்பம் பற்றிய நினைவுகளைச் சுமந்து வாழ்வதால் முதியோரது மன நிலை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அதனால் உடல் நலமும் சீர்கெட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. எனவே யாழ்ப்பாணப் பண்பாட்டில் முதியோர் முற்காலங்களில் பெற்றிருந்த மதிப்பார்ந்த வாழ்வியல் மாற்றம் பெற்றுவிட்டது. குடும்ப நிலையிலும் சமூக நிலையிலும் முதியோரின் பங்களிப்பு பெரிதாக இடம்பெறுவதில்லை. பண்பாட்டுப் பேணலில் முதியோர் வகித்த இடமும் மாற்றமடைந்துள்ளது. இந்த மாற்றத்தின் செல்நெறி ஆய்வுக்குரியதாகவுள்ளது. இளமைக்கும் முதுமைக்குமிடையே அன்புத் தொடர்பை ஏற்படுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டால் இந்நிலை மாற்றமடையலாம்.


(தொடரும்...)

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாக்கள்

புலமைப்பரிசில் பரீட்சை ஆசிரியர்: ஆர். நளினி
KPS Academy - Kotahena

கீழ்வரும் வினாக்களுக்கு சரியான விடையினை எழுதுக?

01)




இது எத்தனை மில்லி மீற்றர் ஆகும்?

02)





இந்த நிறையில் எத்தனை 100 கிராம்கள் உள்ளன?

03) 600 m + 100 m + 50 m இதனைக் கூட்டுக

04) இதில் 5 லீற்றர் பால் உள்ளது. இதனை 5 பேர் சமனாகப் பகிர்ந்து எடுத்தால் ஒருவருக்கு எவ்வளவு பால் கிடைக்கும்?



05)



1) உருவில் உள்ள விளிம்புகளின் எண்ணிக்கை யாது?

2) முகங்களின் எண்ணிக்கை யாது?

06) 9656 ஐ எழுத்தில் எழுதுக?

07) சீதா சட்டை ஒன்று தைப்பதற்காக ஒரு மீற்றர் ரூ. 125 விலையுள்ள சட்டைத் துணியில் 2 1/2 m உம், ஒரு மீற்றர் ரூ. 12.50 விலையுள்ள இறேந்தை 6 m உம் வாங்கினாள். தையற் கூலியாக ரூபா 135.00 கொடுத்தால் அச்சட்டையைத் தைப்பதற்கு செலவாகும் மொத்தப் பணம் எவ்வளவு?

08) ஒரு யன்னல் திரைச்சீலைக்கு 5m 25 cm துணி தேவைப்படுகிறது. அவ்வாறான 12 யன்னல்களுக்குத் தேவைப்படும் துணியின் அளவு யாது?


09) போத்தல் ஒன்றில் உள்ள குளிர்பானத்தின் அளவு 375 ml. அவ்வாறான 9 போத்தல்களில் உள்ள குளிர்பானம் பெரிய போத்தல் ஒன்றினுள் ஊற்றப்பட்டது எனின் பெரிய போத்தலில் உள்ள குளிர்பானத்தின் கனவளவு யாது?

10) 1 kg அரிசியின் விலை ரூபா 110.00 ஆகும். 2 kg 750g அரிசியின் விலை யாது?

11) 16099 இவ்வெண்ணுக்கு அடுத்து வரும் எண்ணை எழுதுக?

12) வாகனம் ஒன்றில் ஒரு தடவையில் 700 செங்கற்களைக் கொண்டு வர முடியும். 4500 செங்கற்களைக் கொண்டு வர வாகனம் எத்தனை முறை பயன்படுத்தப்பட வேண்டும்?

13)




காட்டப்பட்டுள்ள உருவில்

1) சுற்றளவு யாது?


2) பரப்பளவு யாது?

14) பயணம் ஆரம்பிக்கும் போது வாகனத்தின் மானியில் இலக்கங்கள் பின்வருமாறு பதியப்பட்டிருந்தன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 0 | 3 | 3 | 9 | 9 | 0 |


இவ்வாகனம் மேலும் 10km சென்ற பின் மானியில் பதிவாகும் இலக்கங்களை எழுதுக.

15)





இவ்வெண் சட்டத்தில் காணப்படும் தொகை இரண்டாயிரத்து முந்நூற்றி நாற்பத்திரண்டு ஆவதற்கு இன்னும் வரைய வேண்டிய கறுப்பு நிற வட்டங்களின் எண்ணிக்கை யாது?

16)



இவ்வட்டங்களில் 3/4 பங்கை நிழற்றிக் காட்டுக.

17)




இவ்வுருவின் சுற்றளவு யாது?

18) XIX - VIII இதன் விடையை உரோமன் இலக்கத்தில் எழுதுக?

19) 3647 + 2309 கூட்டுக

20) ஒன்று ரூபா 26.00 பெறுமதியுள்ள மூன்று பயிற்சிப் புத்தகங்களை வாங்கிக் கொண்டு வியாபாரியிடம் 50.00 ரூபா காசுத்தாள் ஒன்றும் 20.00 ரூபா காசுத்தாள் இரண்டும் கொடுத்தால் கிடைக்கும் மீதிப் பணம் எவ்வளவு?

21) 3kg 750g சீனியிலிருந்து 250g கொண்ட எத்தனை சிறிய பைக்கற்றுக்களை ஆக்க முடியும்?

22) ஒரு பாத்திரத்தில் 1 லீற்றர் 760 மில்லி லீற்றர் பாலும் இன்னோர் பாத்திரத்தில் 2 லீற்றர் 243 மில்லி லீற்றர் பாலும் இருந்தது. அதன்படி இரண்டு பாத்திரத்திலும் உள்ள நீரின் அளவு யாது?

23) 2 கிலோ கிராம் தேயிலை தூளிலிருந்து 200 கிராம் நிறையுள்ள எத்தனை சிறிய தேயிலைத் தூள் பைக்கற்றுக்களை ஆக்கலாம்?

24) 1, 4, 9, 16, 28, ........... எனும் இவ் எண் கோலத்தில் வெற்றிடத்தில் பொருத்தமாக வர வேண்டிய எண்ணை எழுதுக?

25) ரூபாய் 636 ஐ ஆறு பேரிடையே சமமாகப் பங்கிட்டால் ஒருவருக்கு கிடைப்பது எவ்வளவு?

26) மாம்பழம் ஒன்றின் விலை ரூபா 9.50 ஆகும். 12 மாம்பழங்களின் விலை யாது?

27) 18:30 மணித்தியாலம் எனும் நேரத்தை சாதாரண கடிகார நேரமாக எழுதுக?

28) கூட்டுக 1/6 + 1/3

29) 8kg 500g உடன் 9kg 600g கூட்டி வருவது?

30) கொடுக்கப்பட்ட விடயத்தை நன்கு வாசித்து எழுவாய் பயனிலையுடன் திருத்தமாக நான்கு சொற்களுக்கு குறையாது ஆறு வாக்கியம் எழுதுக?

கோடை வெயில் கொழுத்தியதால் பயிர்கள் யாவும் வாடி வதங்கின பறவைகளும் விலங்குகளும் குடிப்பதற்கு நீர் தேடி அலைந்தன அவ்வேளை ஒரு பெருமழை பெய்தது. அதன் பின் நடக்கக் கூடியது என நீர் கருதும் விடயத்தை எழுதுக ?




## எஸ்.எல்.பி.எல். லிருந்து விலகினார் கெய்ல்



ஸ்ரீலங்கன் பிரிமியர் லீக் (எஸ்.எல்.பி.எல்.) இருபது-20 கிரிக்கெட் தொடரில் மேற்கிந்தியத்தீவுகள் அணியின் அதிரடி வீரர் கிறிஸ் கெய்ல் பங்குபற்றமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எஸ்.எல்.பி.எல். தொடர் நாளை கோலாகலமாக ஆரம்பமாவுள்ள நிலையிலேயே உடற்றகுதிப் பிரச்சினை காரணமாக இத்தொடரில் அவர் விளையாடமாட்டார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடரில் ஊவா நெக்ஸ்ட் அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த கிறிஸ்கெய்ல் அவ்வணியின் தலைவராகவும் நட்சத்திர வீரராகவும் நியமிக்கப்பட்டிருந்தார். இந்நிலையில் அண்மையில் இடம்பெற்ற நியூஸிலாந்து அணிக்கெதிரான தொடரின் போது அவருக்கு ஏற்பட்ட காயம் முழுமையாக குணமடையாததினால் அவர் இத்தொடரிலிருந்து விலகியுள்ளார்.

## Olympic Medal list

| Rank | Country | Gold | Silver | Bronze | Total |
|---|---|---|---|---|---|
| 01 | China | 36 | 22 | 19 | 77 |
| 02 | America | 34 | 22 | 25 | 81 |
| 03 | Britain | 22 | 13 | 13 | 48 |
| 04 | South Korea | 12 | 7 | 6 | 25 |
| 05 | Russia | 11 | 19 | 22 | 52 |
| 06 | France | 8 | 9 | 11 | 28 |
| 07 | Germany | 7 | 15 | 10 | 32 |
| 08 | Italy | 7 | 6 | 4 | 17 |
| 09 | Hungary | 6 | 2 | 3 | 11 |
| 10 | Kazakhstan | 6 | 0 | 2 | 8 |
| 11 | Australia | 5 | 12 | 9 | 26 |
| 12 | Netherlands | 5 | 4 | 6 | 15 |
| 13 | Japan | 4 | 13 | 14 | 31 |
| 14 | Iran | 4 | 3 | 1 | 8 |
| 15 | North korea | 4 | 0 | 1 | 5 |
| 16 | Cuba | 3 | 3 | 1 | 7 |
| 16 | New Zealand | 3 | 2 | 5 | 10 |
| 18 | Belarus | 3 | 2 | 4 | 9 |
| 19 | South Africa | 3 | 1 | 0 | 4 |
| 20 | Ukraine | 3 | 0 | 6 | 9 |

### கைதடி மின்னொளி விளையாட்டுக் கழகம் நடத்தும்
## கரப்பந்தாட்ட இறுதிச் சமர் இன்று

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 57ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மின்னொளி விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டி இன்று இரவு நடைபெறவுள்ளது.

இரு பிரிவாக நடைபெறும் இறுதிப் போட்டியில் வடமாகாண ரீதியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணியும் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணியும் மோதவுள்ளன. தென்மராட்சி ரீதியிலான போட்டியில் மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக்கழக அணியும் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழக அணியும் மோதவுள்ளன. இப்போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட மெய்வல்லுனர் பயிற்றுனர் கே. முகுந்தன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.





## இன்றைய ஆட்டங்கள்

அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்தின் 85 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் அல்வாய் வடக்கு நக்கீரன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தொண்டமனாறு கலைவாணி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

★★★★

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இன்றைய ஆட்டத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு வதிரி டைமன்ஸ் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணியும் 4.30 மணிக்கு நடைபெறும் மற்றுமொரு ஆட்டத்தில் இளவாலை சென். ஹூட்ஸ் அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் அணியும் மோதவுள்ளன.

## உதைபந்தாட்ட போட்டி நாளை ஆரம்பம்

(பருத்தித்துறை நிருபர்)

கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை அனுசரணையுடன் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி நாளை ஆரம்பமாகவுள்ளது.

இதன் முதல் போட்டியின் நாளைய ஆட்டத்தில் மாலை 3.30 மணிக்கு கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து விண்மீன்கள் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. 4.30 மணிக்கு மற்றுமொரு ஆட்டத்தில் நவசக்தி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து யங்கமன்ஸ் விளையாட்டுக்கழகம் விளையாடவுள்ளது.

### ஸ்பெயின் தொடர்ந்தும் முதலிடத்தில்

சர்வதேச கால்பந்து அணிகளுக்கான தரவரிசை பட்டியலில் உலக சம்பியன் ஸ்பெயின் அணி தொடர்ந்தும் முதலிடத்திலேயே நீடிக்கின்றது.

பீபா கால்பந்தாட்ட அமைப்பின் தரப்படுத்தல் பட்டியல் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது. இதில் ஸ்பெய்ல் அணி 1, 605 புள்ளிகளைப் பெற்று தொடர்ந்தும் முதலிடத்திலேயே நீடிக்கின்றது.

# ஒலிம்பிக்கிலும் எம்மவர் சாதிக்க வேண்டும்



## ஒலிம்பிக் சாதனையாளர் எதிர்வீரசிங்கம்



1952, 1956 ஆம் ஆண்டுகளில் ஒலிம்பிக் போட்டிகளிலும் மூன்று ஆசிய போட்டிகளிலும் இலங்கையைப் பிரதிநிதித்துவப் படுத்தி விளையாடியவர் ஒலிம்பிக் சாதனையாளர் நாகலிங்கம் எதிர்வீரசிங்கம். இவர் இலங்கையின் முன்னணி உயரம் பாய்தல் வீரராகவும் சாதனையாளராகவும் திகழ்ந்தவர். 1958 இல் ஆசியப் போட்டிகளில் பல புதிய சாதனைகளை நிலைநாட்டியுள்ளார். இவர் உயரம் பாய்தலில் ஏற்படுத்திய சாதனை பல ஆண்டுகளாக முறியடிக்கப்படாமல் இருந்துள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த அவர் யாழ்ஓசையின் விளையாட்டுப் பகுதிக்கு வழங்கிய விசேட செவ்வியினை யாழ் ஓசை வாசகர்களுக்குத் தருவதில் பெருமை கொள்கின்றது.

**கேள்வி:- ஒலிம்பிக் போட்டியில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் கலந்து கொண்டு சாதனை படைத்துள்ளீர்கள். உங்களின் ஆரம்ப காலம் பற்றி நாம் அறியலாமா?**

**பதில்:-** என்னுடைய சொந்த இடம் பெரியவிளான். விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவன். ஆரம்பக் கல்வியை பெரியவிளான் ஆர்.ரி.எம்.எஸ். இல் ஆரம்பித்து 3 ஆம் வகுப்புவரை படித்தேன். பிற்பாடு ஆங்கில மொழிக் கல்விக்காக 2 ஆம் வகுப்பில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இணைத்துக் கொள்ளப்பட்டேன்.

அமெரிக்கா கோர்னால் பல்கலைக்கழகத்தில் விவசாய விஞ்ஞானத்தில் பட்டம் பெற்றேன். மேற்கு ஆபிரிக்காவின் செறலின் பல்கலைக்கழகத்தில் 12 வருடங்கள் விரிவுரையாளராகவும் பப்புவா நியூகினோ பல்கலைக்கழகத்தில் யுனெஸ்கோவின் விசேட பிரதிநிதியாகவும் பணியாற்றியுள்ளேன்.

1994 ஆம் ஆண்டு கிளிநொச்சியில் இயங்கிய யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தில் ஒரு வருடம் விரிவுரையாளராகப் பணிபுரிந்தேன். கிளிநொச்சி, திருகோணமலை தொலைக் கல்வி நிலையத்தில் விளையாட்டுக் கல்வித்துறையில் சேவை புரிந்தேன். வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் ஆலோசகராக 1998, 1999களில் பணியாற்றியுள்ளேன்.

**கேள்வி:- ஒலிம்பிக் வரை சென்று எம் மண்ணுக்குப் பெருமை சேர்த்த நீங்கள் வெளிநாடுகளிலும் சேவையாற்றியுள்ளீர்கள். அதன் அனுபவங்கள் பற்றிக் கூறுவீர்களா?**

**பதில்:-** சிறந்த அனுபவத்தை புதிய சூழலில் பெற்றுள்ளேன். எனது அனுபவத்தில் பல பரீட்சார்த்தமான செயற்பாடுகள் வெற்றியளித்துள்ளன. ஆபிரிக்க நாடுகளில் பணியாற்றியுள்ளேன். அங்குள்ள நில அமைப்பு வன்னிப் பிரதேசத்தைப் போன்றது நான் அங்கு சென்றபின் புதிதாக பல்கலைக்கழகம் ஒன்று உருவாக்கப்பட்டதோடு அச் சமுதாயமும் வளர்ச்சியடைந்தது. இதேபோல் எமது வன்னிப் பிரதேசத்தையும் வளர்ச்சியடையச் செய்யலாம்.

இதற்காக விவசாய பீடம் மீண்டும் கிளிநொச்சியில் இயங்குவதுதான் நல்லது என நினைக்கிறேன். இதற்கு எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவேண்டும். இதனூடாக அப் பிரதேசம் மேலும் வளர்ச்சியடையும் பொறியியல் பீடத்திற்கு பல்கலைக்கழக மானியம் அனுமதி கொடுத்து 15 வருடங்களாகியும் தொடங்கவில்லை. பொறியியல் பீடத்தையும் வன்னிப் பிரதேசத்தில் ஆரம்பிப்பதன் ஊடாக அப் பிரதேசத்தை மீளவும் வளர்ச்சியுறச் செய்யமுடியும்.

**கேள்வி:- விளையாட்டின் மீதான ஆர்வம் எவ்வாறு உங்களுக்கு ஏற்பட்டது?**

**பதில்:-** எங்கள் வீட்டு வளவில் ஓடுவது பாய்வது என எனது பயிற்சியை ஆரம்பித்தேன். 1948 ஆம் ஆண்டு யாழ். மத்திய கல்லூரியின் அதிபராக இருந்த சிமித் றீகல் தியேட்டருக்கு அழைத்துச் சென்று ஒலிம்பிக் படக் காட்சியை காண்பித்தார். நானும் அக் காட்சியை பார்த்தேன். இது என் அடி மனதில் பதிந்து என்னை ஒலிம்பிக்கில் பங்குபற்ற வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டியது.

**கேள்வி:- உங்களின் சர்வதேச ரீதியிலான சாதனைகள் பற்றிக் கூறுவீர்களா?**

**பதில்:-** 1951 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் தகுதி பெற்று கடுமையான பயிற்சிகளின் மூலம் இறுதிச் சுற்றில் கலந்து கொண்டு இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஒலிம்பிக்கில் பங்குபற்றினேன்.

பிலிப்பைன்ஸ் நாட்டின் மணிலா தலை நகரில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியில் 1953 ஆம் ஆண்டு உயரம் பாய்தலில் சாதனையை நிலை நாட்டினேன். இச் சாதனை 33 வருடங்களாக முறியடிக்கப்படாமல் இருந்தது. 1958 ஆம் ஆண்டு இலங்கை சார்பில் ஆசிய சம்பியன் போட்டியில் தங்கப் பதக்கத்தைப்பெற்றுக் கொண்டேன். 1962 ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டியொன்றில் வெள்ளிப்பதக்கம் பெற்றேன்.

**கேள்வி:- தற்போது விளையாட்டுத்துறைக்கு எவ்வாறான சேவைகளைச்செய்து வருகிறீர்கள்?**

**பதில்:-** தற்போது இலங்கை விளையாட்டுத்துறைக்கான ஆலோசகராகச் செயற்பட்டு வருகின்றேன். வெளிநாடுகளுடன் ஒப்பிடும்போது எமது பிரதேசம் விளையாட்டுத் துறையில் பின்தங்கியுள்ளது. இலங்கையின் உயரம் பாய்தல் வீராங்கனை மஞ்சுளாவிற்கான உயரம் பாய்தல் பயிற்சிகளை வழங்கி வருகின்றேன்.

**கேள்வி:- வெளிநாடுகளுடன் ஒப்பிடும்போது எமது நாட்டில் விளையாட்டுத்துறையில் எவ்வாறான மாற்றங்கள் ஏற்படவேண்டும் எனக் கருதுகிறீர்கள்?**

**பதில்:-** விளையாட்டுத்துறையைப் பலப்படுத்த வேண்டும். இதற்காக கடுமையான பயிற்சிகளை வழங்கவேண்டும். விளையாட்டுத்துறையை கல்வியோடு இணைந்ததாக வளர்த்துச் செல்லவேண்டும். அமெரிக்காவைப் பொறுத்தவரை ஒலிம்பிக்கில் பங்குபற்றுபவர்கள் அனைவரும் பல்கலைக்கழக மாணவர்கள், பட்டதாரிகள் அந்த நிலை இங்கும் வரவேண்டும்.

> **இங்கு விளையாட்டில் அதிகம் ஆர்வமுடையவர்கள் படிப்பில் குறைந்த நிலையில் உள்ளார்கள். நமது சமூகமும் அவ்வாறே அவர்களை வளர்த்து வருகின்றது. இந்த நிலை மாறவேண்டும். விளையாட்டுக்கும் கல்விக்கும் சம முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.**

இங்கு விளையாட்டில் அதிகம் ஆர்வமுடையவர்கள் படிப்பில் குறைந்த நிலையில் உள்ளார்கள். நமது சமூகமும் அவ்வாறே அவர்களை வளர்த்து வருகின்றது. இந்த நிலை மாறவேண்டும். விளையாட்டுக்கும் கல்விக்கும் சம முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்.

கிரிக்கெட் சுற்றுப் போட்டி போன்று பல்கலைக்கழகங்கள் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள் நடத்தப்பட வேண்டும்.

விளையாட்டுத்துறையில் ஈடுபடுபவர்களுக்கு நீண்ட கடுமையான அர்ப்பணிப்புடன் கூடிய பயிற்சிகள் வழங்கப்படவேண்டும். எதிர்வரும் காலங்களில் எமது மண்ணிலிருந்து வீர வீராங்கனைகள் ஒலிம்பிக் போன்ற சர்வதேச போட்டிகளில் பங்கேற்க செல்ல வேண்டும்.

நேர்கண்டவர் - எஸ்.ரி. குமரன்

Printed and published by Express Newspapers (Cey) Ltd. at No. 185, Grandpass Road, Colombo 14. On Friday August 10, 2012